தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மருத்துவப் பயன் கொண்ட வெள்ளரி சாகுபடி முறைகள்



உலகக் காய்கறி சாகுபடி பரப்பளவில் வெள்ளரி சாகுபடி 4 ஆவது இடத்தை வகிக்கிறது. மருத்துவப் பயன் கொண்ட வெள்ளரி சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.

இது குறித்து திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட வெள்ளரி பண்டைக்காலம் முதல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியாவில் இருந்து கிரேக்கர்கள், ரோமானியர்கள் மூலம் ஐரோப்பாவிற்கு பரவிய வெள்ளரி, உலகம் முழுவதும் பரவி உலகக் காய்கறி சாகுபடி பரப்பளவில் 4 ஆவது இடத்தை வகிக்கிறது. வெள்ளரி உலகம் முழுவதும் விரும்பி உண்ணப்படுவதற்கு காரணம் அதன் மருத்துவக் குணங்களாகும்.

மருத்துவப் பயன்கள்: உணவே மருந்து என்ற தத்துவத்திற்கு வெள்ளரி உன்னத எடுத்துக்காட்டு. 95 சதவீத நீர் சத்துடன் சாதாரண நீரை விட சத்து மிகுந்த நீரைக் கொண்டிருப்பதால் உடல் வெப்ப நிலையையும், நீர்ச்சத்தையும் சீராகப் பராமரித்து, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகிறது.

வெள்ளரியில் உள்ள வைட்டமின்களும், மாங்கனீசு, பொட்டாசியம், சிலிக்கான் ஆகிய தாதுக்கள் தோல் பாதுகாப்புக்கு உதவுகின்றன. லேரிசிரிசினால்.

பினோரெசினால், சீகோஐசோசிரிசினால் என்ற மூன்று லிக்கன்கள் பலவகையான புற்றுநோய்களைத் தடுக்கின்றன.

வெள்ளரிச் சாற்றில் உள்ள பொட்டாசியம், மெக்னீசியம், நார்ச்சத்து ஆகியன ரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்க உதவுகின்றன. வாய் துர்நாற்றத்தைப் போக்கவும், பல், ஈறுகளைப் பாதுகாக்கவும் வெள்ளரி உதவுகிறது. சீரண மண்டலத்தில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, அமிலத்தன்மை, நெஞ்செரிச்சல், குடல்புண் ஆகியவற்றைக் குணமாக்கி சீரணத்திற்கு உதவுகிறது. மேலும் மலச்சிக்கலைப் போக்கும்.

வெள்ளரி விதைகள் நாடாப்புழுக்களை வெளியேற்ற உதவுகிறது. இதில் உள்ள சிலிகான், மூட்டுத் தசைகளுக்கு வலு அளிப்பதாலும், வைட்டமின்கள் ஏ, பி6, சி, போலேட், கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம் ஆகியன யூரிக் அமில அளவைக் குறைப்பதாலும், மூட்டு வலிக்கு நிவாரணம் அளிக்கிறது.

இன்சுலினைச் சுரக்கும் கணைய செல்களுக்கு தேவைப்படும் வளர்ச்சி ஊக்கி (ஹார்மோன்) வெள்ளரியில் உள்ளது. இதனால் சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும் வெள்ளரி இனியது. இதில் ஸ்டிரால்கள் என்ற கூட்டுப்பொருள்கள் கொழுப்பைக் குறைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சிலிக்கானும், கந்தகமும் கூந்தல் வளர்ச்சிக்கு உதவுகிறது. கண் வீக்கம், கருவளையங்களைப் போக்கவும், சிறு நீரகக் கற்களைக் கரைக்கவும் வெள்ளரி உதவுகிறது. கொழுப்பில்லாத, கலோரி குறைவான உணவாதலால், எடையைக் குறைக்க இது மிகவும் ஏற்ற உணவு.

சாகுபடி முறைகள்: கோ 1, ஜப்பானிஸ் லாங் கிரீன், ஸ்டெரெய்ட் எய்ட், பாயிண்ட் செட்டி ரகங்கள் பயிரிடலாம். நல்ல வடிகால் வசதியுள்ள அங்ககச்சத்து நிறைந்த மணற்சாரி வண்டல் மண் மிகவும் இதற்கு ஏற்றது. கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்கலாம். ஜூன் மாதமும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 மாதங்களும் விதைப்பதற்கு ஏற்ற பருவம்.

விதைப்பு: நிலத்தை நான்கு முறை நன்கு உழவேண்டும். 5 அடி இடைவெளியில் நீளமான கால்வாய்கள் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற ரசாயன உயிர்ப் பூசணக் கொல்லி மருந்தையோ அல்லது 2 கிராம் கார்பண்டசிம் என்ற ரசாயனப் பூசணக் கொல்லி மருந்தையோ கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். கால்வாயின் பக்கவாட்டில் 2 அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். பின் குத்துக்கு 2 செடிகள் இருக்குமாறு களைத்து விட வேண்டும். விதைகளை ஊன்றுமுன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர் வாரம் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

உரமிடுதல்: ஏக்கருக்கு 16 மெட்ரிக் டன் தொழு உரத்தை அடியுரமாக இட வேண்டும். பின் விதைத்த 30 தினங்களில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து தரவல்ல 30 கிலோ யூரியாவை மேல் உரமாக இடவெண்டும். 2 அல்லது 3 முறை களைக் கொத்து கொண்டு களை எடு்க்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: பழ ஈ யினால் பாதிக்கப்பட்ட பழங்களைச் சேகரித்து அழித்து விட வேண்டும். பழ ஈக்களின் எண்ணிக்கை வெப்பமான நாள்களில் குறைவாகவும், மழை பெய்யும் பருவத்தில் அதிகமாகவும் இருக்கும். ஆகவே மழைக் காலங்களில் காய்ப் பருவம் வராத நிலையில் விதைப்பு தேதியை நிர்ணயித்து விதைக்க வேண்டும். நன்கு உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழிப்பதன்மூலம் பழ ஈ தாக்குதலைக் குறைக்கலாம்.

சாம்பல் நோய் தாக்குவதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு அரை கிராம் டினோகரப் அல்லது கார்பண்டசிம் கலந்து தெளிக்கலாம்.

வெள்ளரி பயிருக்கு நச்சாகிப் பயிருக்கு தீங்கு தரக்கூடிய லிண்டென் 1.3 சதவீத தூள், தாமிர, கந்தகப் பூசணக் கொல்லிகள் ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது. 80 முதல் 90 நாள்களில் ஏக்கருக்கு 4,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

ஆகவே வெள்ளரி சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் உரிய பருவங்களில் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து அதிக மகசூலும், உன்னத லாபமும் தருவதுடன், சமூகத்திற்கும், மருத்துவப் பயன்மிக்க வெள்ளரியை அதிக உளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் அவர்.

## குலைநோய் தாக்குதலில் இருந்து நெற்பயிர்களை காப்பது எப்படி?



குலைநோய்த் தாக்குதலில் இருந்து நெற்பயிர்களை எவ்வாறு காப்பது என அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் வட்டாரத்தில் தற்போது நடவு செய்துள்ள நெற்பயிர்களை வேளாண்மைத்துறை துணை இயக்குநர் (மாநில திட்டம்) குருமூர்த்தி, கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பயிர் நோயியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் கமலக்கண்ணன், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தா.தமிழ்மலர், வேளாண்மை அலுவலர் ஆ.விக்டர் சுபராஜா மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அப்போது, செய்துங்கநல்லூர் மற்றும் கருங்குளம் கிராமங்களில் நடவு செய்துள்ள நெற்பயிர்களில் குலைநோய்த் தாக்குதல் பரவலாக தென்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. நாட்டார்குளம் மற்றும் விட்டிலாபுரம் கிராமங்களில் நடவு செய்துள்ள நெற்பயிர்களில் இலை உறை கருகல் நோய் தென்படுகிறது.

இதையடுத்து, குலைநோய் மற்றும் இலைஉறை அழுகல் நோய்களின் அறிகுறிகள் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண்மைத் துறை அதிகாரிகள் அளித்துள்ள ஆலோசனைகள்:

நெல் குலைநோய் அறிகுறிகள்:

இலையின் மேற்பரப்பில் சிறிய செம்மை நிற கண் வடிவப் புள்ளிகள் தோன்றி அவை ஒன்றோடு ஒன்று இணைந்து இலை கருகிவிடும், கதிரின் கழுத்துப் பகுதியில் கருமை நிறை புள்ளிகள் தோன்றுவதால், கதிரிலுள்ள மணிகள் பதராகிவிடும். சில நேரங்களில் கதிர் ஒடிந்து கீழே விழுந்துவிடும்.

காற்றின் மூலம் பரவும் பைரிகுலேரியா ஒரைசா என்ற பூசணத்தினால் இந்நோய் ஏற்படுகிறது. இரவு நேர வெப்பநிலை 20 240 செ மற்றும் ஈரப்பதம் 90 சதவீதம், இந்த நோய் பரவ ஏற்றதாக அமைகிறது.

நோய்க்கட்டுப்பாடு:

இந்த நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ட்ரைசைக்ளோ சோல் - 200 கிராம் அல்லது இப்ரோபென் பாஸ் - 200 மிலி அல்லது கார்பெண்டாசிம் - 200 கிராம் திரவத்துடன் கலந்து அடிக்க வேண்டும்.

இலை உறை கருகல் நோய் அறிகுறி:

நெற்பயிரின் தண்டுப்பாகத்தில் நீண்ட முட்டை வடிவ செம்மை நிறப்புள்ளிகள் தண்ணீர் மட்டத்திலிருந்து தோன்றி மேல் நோக்கி பரவும். நோயின் தீவிரம் அதிகமாகும்போது அனைத்து தூர்களும் பாதிக்கப்பட்டு தூர் கருகிவிடும்.

தண்ணீர் மூலம் பரவும் ரைசொக்டோனியா சொலானி என்ற பூசணத்தின் மூலம் இந்நோய் ஏற்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 25 300 செ ஈரப்பதம் 80 சதவீதம் மற்றும் தேங்கும் நீர் ஆகியவை இந்நோய் பரவ ஏற்ற சூழ்நிலைகள் ஆகும்.

நோய்க்கட்டுப்பாடு:

இந்த நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பெண்டாசிம் - 200 கிராம் அல்லது ஹெக்சகோனாசோல் - 200 மிலி அல்லது இப்ரோபென்பாஸ் - 200 கிராம் என பூஞ்சாணக்கொல்லியுடன் திரவத்துடன் சேர்த்து இலைவழியாக செலுத்த வேண்டும்.

இதில், ஏதாவது ஒரு மருந்தை இரண்டு தடவை 15 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். மேலுரமாக யூரியா உரம் இடுவதை தவிர்க்க வேண்டும். விவசாயிகள் இதனை அறிந்து தகுந்த பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**கரும்பு விவசாயிகள் மீது வஞ்சனை: மத்திய, மாநில அரசுகள் மீது வைகோ புகார்**
கரும்புக்கு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

விவசாயிகள் மற்றும் கரும்பு ஆலை நிர்வாகம் ஆகியவற்றோடு தமிழக அரசு முத்தரப்புக் கூட்டம் நடத்தி கரும்பு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்வது

வழக்கம்.

ஆனால் தற்போது முத்தரப்புக் கூட்டம் நடத்தாமல் அரசே கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.2,650 என்று நிர்ணயித்துள்ளது.

இது ஏற்கக் கூடியது இல்லை. விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

உள்நாட்டில் கரும்பு விவசாயிகளின் நிலைமை கேள்விக்குறியாக உள்ளது. இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்து, விவசாயிகளின் வயிற்றில் மத்திய அரசு அடிக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் வஞ்சகத்தால் கரும்பு விவசாயிகளின் துயரம் தொடர்ந்து கொண்டே உள்ளது.

எனவே, தமிழக அரசு அறிவித்த கரும்பு கொள்முதல் விலையை மறுபரிசீலனை செய்து, நடப்பு ஆண்டில் கரும்புக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ. 3,500 என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**வெங்காயம் விலை சரிவு நுகர்வோர் மகிழ்ச்சி; விவசாயிகள் கண்ணீர்**

வெங்காயத்தின் விலை ரூ. 15 ஆக சரிவடைந்துள்ளதால், நுகர்வோர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே நேரத்தில், சாகுபடி செய்த விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

தமிழகம் மட்டுமின்றி, இந்தியா முழுவதும் உணவுத் தயாரிப்பில் முக்கியப் பங்கு வகிப்பது வெங்காயம். வெங்காயத்தின் விலை உயர்ந்தால், பாதிக்கப்படுவது பொதுமக்கள் மட்டுமின்றி, ஆட்சியாளர்களும்தான் என்பதை பல மாநிலத் தேர்தல் முடிவுகள் உறுதிபடுத்தியுள்ளன.

அந்த அளவுக்கு பிரபலமான வெங்காயத்தின் விலை, கடந்த சில நாள்கள் வரை கிலோ ரூ. 90 என ஏறுமுகத்தில் இருந்தது. இந் நிலையில் திடீர் திருப்பமாக, தற்போது ரூ. 15 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முதல் தர வெங்காயத்தின் விலை கிலோவுக்கு ரூ. 30 ஆக உள்ளது.

மகாராஷ்ட்ர மாநிலம் புணே, நாசிக் பகுதிகளிலிருந்து பல்லாரி வெங்காயத்தின் வரத்து அதிகரித்ததால், சின்ன வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது என்கிறார், திண்டுக்கல் வெங்காயத் தரகு மண்டி சங்கத் தலைவர் ஏ. பெருமாள்சாமி. மேலும் அவர் கூறியது:

கடந்த சில மாதங்களாக பல்லாரி வெங்காயத்தின் வரத்து குறைவாக இருந்ததால், பல்லாரி மற்றும் சின்ன வெங்காயத்தின் விலை உயரத் தொடங்கின. தற்போது, மகாராஷ்ட்ர மாநிலத்தில் பல்லாரி விளைச்சல் அதிகரித்துள்ளதால், வரத்தும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

புணே, நாசிக் பகுதிகளிலிருந்து, திண்டுக்கல்லுக்கு மட்டும் வாரத்துக்கு 3 முறை தலா 150 டன் பல்லாரி வெங்காயம் லாரிகள் மூலம் கொண்டு வரப்படுகின்றன. இதனால், கிலோவுக்கு ரூ. 50 முதல் ரூ. 80 வரை விற்ற பல்லாரி, தற்போது ரூ. 15 க்கு சரிந்துள்ளது.  விலை குறைந்ததை அடுத்து, சின்ன வெங்காயம் வாங்குவோர், அதிக அளவில் பல்லாரியை வாங்கத் தொடங்கினர்.

இதனிடையே, திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், திருச்சி மாவட்டம் துறையூரிலிருந்தும் சின்ன வெங்காயம் அதிக அளவு சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளன.

இதன் காரணமாக, கடந்த வாரம் ரூ. 80-க்கு விற்ற சின்ன வெங்காயத்தின் விலையும், புதன்கிழமை ரூ. 15 ஆக சரிவடைந்துள்ளது. இந்த நிலை வரும் பொங்கல் பண்டிகை வரை நீடிக்கும் என்றார் அவர்.

நுகர்வோருக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி, விவசாயிகளை கஷ்டத்தில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து, திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை அடுத்துள்ள பெருமம்பட்டி பகுதியைச் சேர்ந்த விவசாயி எம். பழனிச்சாமி தெரிவித்தது:

ஒரு ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்வதற்கு, விதைக்காய் வாங்குவதற்கு கிலோவுக்கு ரூ. 65 வீதம் மொத்தம் ரூ. 27,250, உழவுக்கு ரூ. 3000, நடவு கூலி ரூ. 2000, உரத்துக்கு ரூ. 6,500, பூச்சி மருந்து தெளிப்புக்கு ரூ. 2000, களை எடுப்புக்கு ரூ. 4000, அறுவடை செய்வதற்கு ரூ. 4000 வழங்க வேண்டியுள்ளது.

போதிய அளவு பருவமழை பெய்யாததால், பெரும்பாலான விவசாயிகள் விலை கொடுத்து தண்ணீர் வாங்கி சாகுபடி செய்தோம். அறுவடை செய்த வெங்காயத்தை சந்தைக்கு கொண்டு வருவதற்கான லாரி வாடகை உள்பட மொத்தம் ரூ. 60 ஆயிரம் வரை செலவு ஏற்பட்டுள்ளது.

ஏக்கருக்கு 6 டன் வெங்காயம் கிடைத்தால், அதில் கழிவு போக 4 டன் மட்டுமே மிஞ்சுகிறது. இந்த சூழ்நிலையில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், தரமான வெங்காயத்துக்கும் கிலோவுக்கு ரூ. 15 மட்டுமே கிடைக்கிறது.  இதனால், கடந்த 3 மாதமாக கஷ்டப்பட்டு வெங்காயம் சாகுபடி செய்ததற்கு, உழைப்புக்கான கூலி கூட கிடைக்காமல் போய்விட்டது. விலை வீழ்ச்சியால், வெங்காயம் சாகுபடி செய்த அனைவருக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிச.27ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

இதுகுறித்து ஆட்சியர் ந.வெங்கடாசலம் தெரிவித்துள்ளது: திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு, டிசம்பர் மாதத்துக்கான குறைதீர் கூட்டம் டிச.27ஆம் தேதி நடைபெறுகிறது. அதில் நவம்பர் மாத கூட்டத்தில் விவசாயிகள் அளித்துள்ள கோரிக்கை மனுக்கள் மீது அதிகாரிகள் பதில் அளிக்க உள்ளனர். எனவே, கூட்டத்தில் பங்கேற்று, தங்களுக்கான பதில்களை விவசாயிகள் தெரிந்துகொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**கீழ் பவானி பாசனம்: 2 -ஆம் பாகம் நிலங்களுக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தல்**

கீழ்பவானி பாசனம் 2-ஆம் பாகம் நிலங்களுக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் எனக் கோரி, திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மனு அளித்தனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் செவ்வாய்க்கிழமை, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில், கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் செயலாளர் கி.வடிவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் அளித்த கோரிக்கை மனு:

கீழ் பவானி பாசனத்தில் மொத்தம் 2.07 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு பாசன நிலங்கள் உள்ளன. இதில், தலா 1,03,500 லட்சம் ஏக்கர் வீதம் 2 பாகங்களாக பிரிக்கப்பட்டு, ஒரு மடை விட்டு ஒரு மடை என பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறது. இதில், திருப்பூர் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அடங்கி உள்ளன.

இதில், 2 -ஆம் பாகம் நிலங்களுக்கு கடந்த 2011- ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டது. அதன்பின் கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக இப் பகுதி பாசனத்திற்கு தண்ணீர் விடப்படவில்லை. கீழ் பவானி பாசனத்தில் சட்டபூர்வமான ஆயக்கட்டு நிலங்களின் பாசனம் உறுதி

செய்யப்பட்ட பிறகு தான், கொடிவேரி பாசனம் 2 -ஆம் போகத்திற்கு தண்ணீர் விடப்பட வேண்டும்.

இதை பொருட்படுத்தாமல், ஈரோடு மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும், ஒரு போகம் முழுமையாகப் பாசனம் பெற்றிருக்கும் கொடிவேரி பாசனத்திற்கு, மீண்டும் உயிர் தண்ணீர் விடுவதற்காக அரசுக்கு பரிந்துரை செய்துள்ளன.

கடந்த 2 ஆண்டுகளுக்கும் கூடுதலாக பாசனம் பெறாத கீழ்பவானி 2 -ஆம் பாகம் நிலங்களுக்கு முறைப் பாசனத்தை புறக்கணித்து, ஆண்டு தோறும் பாசனம் பெற்றுள்ள கொடிவேரி பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் விட பரிந்துரை செய்திருப்பது என்பது கீழ் பவானி பாசன விவசாயிகளுக்கு செய்யும் துரோகம் ஆகும்.

÷எனவே,கொடிவேரி பாசனத்திற்கு உயிர்தண்ணீர் விடுவதை நிறுத்தி விட்டு, கீழ்பவானி பாசனத்தில் எள் பயிரிடுவதற்கு தண்ணீர் விட, ஆட்சியர் பரிந்துரை செய்ய வேண்டும் என்றனர்.

**கறவை மாடுகளுக்கு இலவச காப்பீடு: பால் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை**

ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு இலவச காப்பீடு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அச் சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, கோவை, திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்க காப்பாளர் எஸ்.ஆர்.ராஜகோபால், தலைவர் கே.எஸ். பாலச்சந்தர் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

÷கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 25 ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர். 650-க்கும் மேற்பட்ட கிராம பால் கூட்டுறவு சங்கம் மூலமாக ஆவினுக்கு பால் வழங்கப்படுகிறது. 4.2 சதவீத கொழுப்பு சத்து, 8.3 இதர சத்துள்ள பசும்பால் லிட்டருக்கு ரூ. 19.40 க்கு பெறப்படுகிறது.

÷கேரளத்தில் கடந்த ஆண்டு முதல் இதே தரம் உள்ள ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ரூ. 27.85 வழங்கப்படுகிறது. இந் நிலையில், தமிழகத்தில் பசும்பால் லிட்டருக்கு ரூ.30, எருமை பால் லிட்டருக்கு ரூ. 35 என விலை உயர்த்தி தர கோரிக்கை விடப்பட்டது.

÷எங்களது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து பசு மற்றும் எருமை பால் லிட்டருக்கு ரூ. 3 உயர்த்தி அறிவித்தமைக்கு தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

÷ஆனால், கன்று வளர்ப்பு மானியம், கிராம கூட்டுறவு சங்க ஊழியர்களின் ஊதிய நிர்ணயம், ஆவினுக்கு பால் தரும் அனைத்து கறவை மாடுகளுக்கும் இலவச காப்பீடு போன்றவை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசு பேச்சுவார்த்தை நடத்த முன் வர வேண்டும்.

### கடும் பனிப் பொழிவு: மல்லிகை மகசூல் பாதிப்பு

சத்தி பகுதியில் நிலவி வரும் பனிப் பொழிவு காரணமாக மல்லிகைப்பூ மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள சிக்கரசம்பாளையம், வடவள்ளி, பவானிசாகர், தாண்டாம்பாளையம், கெஞ்சனூர் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மல்லிகை, முல்லைப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தினமும் 25 டன் பூக்கள் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது நிலவும்  கடும் பனிப் பொழிவு காரணமாக பூக்களின் வரத்து ஒரு டன்னாக குறைந்விட்டது. அதேநேரத்தில், பூக்களின் விலையும் கிலோ ரூ.300-ஆக சரிந்துவிட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான கோடை காலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக 150 கிலோ வரை பூக்கள் கிடைக்கும். கடும் பனிப் பொழிவால் பூக்களின் மொட்டு சிறுத்து வளர்ச்சியின்றி காணப்படுகிறது. மேலும், பல்வேறு வகையாக புழுக்களின் தாக்குதலாலும் மகசூல் பாதிக்கப்பட்டு, ஏக்கருக்கு அரை கிலோ என்ற அளவில் அடியோடு சரிந்துவிட்டது.

மார்கழி மாதம் என்பதால் பூக்களின் விலையும் கிலோ ரூ.300-ஆக சரிந்துவிட்டது. முல்லை கிலோ ரூ.400 வரை விற்கப்பட்டது. இதனால், மார்க்கெட்டில் பூ விற்பனை மந்தமாக உள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியாளர் தலைமைச் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.முத்துச்சாமி, செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் புதன்கிழமை கூறியது: சத்தியமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் கடும் பனிப் பொழிவால், பூக்களின் காம்புகள் அடர் பச்சை நிறத்தில், திடமாக இல்லாமல் மெட்டுகளில் பச்சைப்புழு பாதிப்பு ஏற்பட்டு அவை சிறுத்து காணப்படுகிறது. இதனால் பூக்களின் உற்பத்தி 90 சதவீதம் வரை குறைந்துவிட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன் மல்லி கிலோ ரூ.1,000-க்கு விற்கப்பட்டது.

**மஞ்சள் இருப்பு வைக்கும் காலம் 365 நாளாக உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

கோபிசெட்டிபாளையம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில், மஞ்சள் இருப்பு வைக்கும் காலத்தை 365 நாள்களாக உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில், வேளாண்மைத் துறையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் விற்பனை குழுக்களுக்கு உள்பட்ட, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வேளாண் விற்பனைப் பொருள்களான மஞ்சள், நெல், சர்க்கரை, எள், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட விளை பொருட்கள் இருப்பு வைக்கப்படுகின்றன.

இவற்றை, விலை வீழ்ச்சிக் காலங்களில், 180 நாள்கள் வரை இருப்பு வைத்து, விலை உயரும் காலங்களில் விற்பனை செய்வர். இருப்பு வைக்கும் காலங்களில், 7 சதவீதம் முதல், 10 சதவீதம் வரை பொருளீட்டுக் கடனாக விவசாயிகள் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில், மஞ்சள் பிரதான பயிராக உள்ளது. பொருளீட்டு கடன் பெறுவதாலும், மஞ்சள் இருப்பு வைக்கும் காலத்தை 180 நாள்களில் இருந்து 365 நாள்களாக உயர்த்த வேண்டும் என இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கமும்,

ஈரோடு மாவட்ட உழவர் விவாதக் குழு, விவசாய அமைப்புகள் சார்பில், தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இக்கோரிக்கையை ஏற்ற தமிழக அரசு, இருப்பு வைக்கும் காலத்தை 365 நாள்களாக உயர்த்தி உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து, அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:

வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவை ஏற்று ஆய்வு செய்த தமிழக அரசு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப விதிகள், விதி எண் 39(3) மற்றும் 39(4) ஆகியவற்றை திருத்தம் செய்து, மஞ்சள் விரலி மற்றும் குண்டு மஞ்சள் வகைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைக்கும் கால அளவை 180 நாள்களில் இருந்து 365 நாள்களாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.இது மஞ்சள் விவசாயிகள் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மஞ்சள் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று, இருப்பு வைக்கும் கால அளவை உயர்த்தியமைக்கு இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் மற்றும் ஈரோடு மாவட்ட உழவர் விவாதக்குழு அமைப்புகளின் சார்பில் முதல்வர், வேளாண் துறை அமைச்சர், வேளாண் வணிக இயக்குநர், விற்பனை மற்றும் வணிகத் துறையினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறோம். இதை மஞ்சள் விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**விவசாயிகளைக் காப்பாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை**

பம்ப்செட் மூலமாக ஆற்றுநீரை உபயோகிக்கும் விவசாயிகளைக் காப்பாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் சிவசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர், செவ்வாய்க்கிழமை சத்தியமங்கலத்தில் வெளியிட்ட அறிக்கை: பவானி ஆற்றிலிருந்து பல ஆண்டுகளாக அருகாமையில் உள்ள கிராம விவசாயிகள் பம்ப்செட் மூலமாக நீர் எடுத்து விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த வாரத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி ஆற்றுநீரை உபயோகிக்கும் பம்ப்செட் மின் இணைப்பை துண்டிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக

இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கர்நாடகத்திலும், கேரளத்திலும் ஆற்று நீரை பம்ப்செட் மூலமாக பெற்று விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. கரூர், நாமக்கல் மாவட்டங்களில் காவிரி ஆற்று நீர் பம்ப்செட் மூலமாக பல கிலோமீட்டர் தூரத்திற்கு குழாய் மூலமாக எடுத்து சென்று விவசாயம் செய்ய தமிழக அரசு அனுமதி கொடுத்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுப்படி நடவடிக்கை எடுத்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் உள்ள பயிர்கள் காய்ந்துவிடும். பவானிசாகர் அணையில் பாசனத்திற்கும், குடிநீர் தேவைக்கும், பம்ப்செட் பாசனத்திற்கும் தேவையான அளவு தண்ணீர் உள்ளது. கெயில் எரிவாயு பைப்லைன் பிரச்னையில் தமிழக அரசு தலையிட்டு விவசாயிகளுக்கு சாதகமான நிலை எடுத்தது.

அதேபோல, நீதிமன்ற உத்தரவுப்படி, பவானி ஆற்று பம்ப்செட் மின் இணைப்பை துண்டிப்பு செய்வதன் மூலமாக விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் காப்பாற்ற தமிழக அரசு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், நீதிமன்றத்தில் தடையாணை பெறக் கால அவகாசத்தை நீட்டித்து தருமாறும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

இதுசம்பந்தமாக, இப்பகுதி விவசாயிகள் நடத்தும் போராட்டத்திற்கு தமிழக விவசாயிகள் சங்கம் ஆதரவு அளிக்குமெனவும், போராட்டத்தில் கலந்து கொள்ளுமெனவும், தமிழக விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் இவ்வார இறுதியில் சத்தியமங்கலத்தில் நடைபெறும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பவானிசாகர் அணை நீர் மட்டம் 59.39 அடி

பவானிசாகர் அணையின் நீர் மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 59.39 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 218 கன அடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் 900 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 7.0 டி.எம்.சி. ஆகும்.

## விவசாயக் கிணறுகளுக்கு மீண்டும் மின் இணைப்பு

விவசாயக் கிணறுகளுக்கு துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகள் மீண்டும் வழங்கப்பட்டன.

பவானிசாகர் அணைப் பகுதியில் இருந்து பவானி கூடுதுறை வரை ஆற்றங்கரையோரம் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலமாக விவசாயிகள் பாசன வசதி பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக மின்வாரிய அலுவலர்கள் பவானிசாகர், சத்தியமங்கலம் ஆற்றோர விவசாயக் கிணறுகளின் மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சில நாள்களாக சத்தி, பவானிசாகர் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுப்பணித் துறை, மின்வாரிய அலுவலர்கள், காவல் துறையினர் உதவியுடன் ஆற்றில் இருந்து நேரடியாகத் தண்ணீர் எடுக்க அனுமதி இல்லை எனக்கூறி சம்பந்தப்பட்ட 8-க்கும் மேற்பட்ட மின் இணைப்புகளைத் துண்டித்தனர். பிரச்னைக்குரிய குழாய்கள் மற்றும் மோட்டார்களை விவசாயிகள் அகற்றினால் மீண்டும் இணைப்பு வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து, 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதை நிறுத்திவிட்டு, தண்ணீர் எடுக்கும் விவசாய உபகரணங்களை எடுத்துச் சென்றனர்.

அதன்பின்பும், மின்வாரிய அலுவலர்கள் மின் இணைப்பு தராமல் தாமதப்படுத்தினர். இதைக் கண்டித்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள், பவானிசாகர் பொதுப்பணித் துறை அலுவலகத்தை முற்றுகையிடுவதாக அறிவித்தனர். இதையடுத்து, மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் பொன்னி விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து, விவசாயிகள் போராட்ட முடிவைக் கைவிட்டனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொதுப்பணித் துறையினர் ஆற்றில் நேரடியாக தண்ணீர் எடுக்காத விவசாயக் கிணறுகளை

செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர். உதவி செயற்பொறியாளர் சுபத்ரா, ஆற்றில் நேரடியாக ஆய்வு செய்து தடையில்லா சான்று வழங்கியதை அடுத்து மின்வாரிய அலுவலர்கள் துண்டிக்கப்பட்ட 8 இணைப்புகளுக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்கினர்.

### மேட்டூர் நீர்மட்டம் 72 அடியானது

மேட்டூர் அணைக்கு போதிய நீர்வரத்து இல்லாததால் நீர்மட்டம் 72 அடியாக சரிந்தது. கடந்த 24 நாள்களில் நீர்மட்டம் 24 அடி குறைந்துள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 1,500 கன அடிக்கு குறைவாகவே உள்ளது.

காவிரி டெல்டா பாசனத்துக்காக நொடிக்கு 9,410 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

நீர்வரத்தைவிட அதிகளவில் தண்ணீர் திறந்துவிடப்படுவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. கடந்த 24 நாள்களில் மட்டும் அணையின் நீர்மட்டம் 24 அடி குறைந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 72.63 அடியாக இருந்தது. நீர்வரத்து நொடிக்கு 1,551 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 35 டி.எம்.சி.யாக உள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு சம்பா சாகுபடிக்காக ஜனவரி 28-ஆம் தேதி வரை தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும்.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில், காவிரி டெல்டா பாசனத்துக்கு முழுமையாக தண்ணீர் திறந்து விடமுடியுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

## பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் ஒத்திவைப்பு

பால் கொள்முதல் விலை உயர்வு போதுமானதாக இல்லை என்றும், இதுவிஷயத்தில் அரசுக்கு அவகாசம் அளிக்கும் விதமாக ஏற்கெனவே அறிவித்த போராட்டத்தை பிப்ரவரி 4-ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளதாக, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

சங்கத்தின் மாநில அவசர செயற்குழுக் கூட்டம் சேலத்தில் புதன்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் எம்.ஜி.ராஜேந்திரன், துணைத் தலைவர் பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து செங்கோட்டுவேல் செய்தியாளர்களிடம் கூறியது:

பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்து அரசு பேச்சுவார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக லிட்டருக்கு ரூ.3 விலை உயர்வு அறிவித்துள்ளது.

இந்த விலை உயர்வு எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. பால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள நிலையில், உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து நஷ்டம் ஏற்படும்.

நீண்ட ஆண்டுகளாக நிலுவையில் உள்ள சுமார் 24 ஆயிரம் கிராம கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படவில்லை.

தமிழகம் முழுவதும் கோமாரி நோயால் சுமார் 30 ஆயிரம் மாடுகள் இறந்துள்ள நிலையில், இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும் அறிவிக்கவில்லை. கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட நிலையில் விற்பனை விலையை உயர்த்தாததால், மாவட்ட ஒன்றியங்களுக்கு நாளொன்றுக்கு ரூ.75 லட்சம் நஷ்டம் ஏற்படும். மக்களவைத் தேர்தல் வரையிலும் விலை உயர்வை அரசு அறிவிக்காது

என்பதால், இந்தக் காலகட்டத்தில் பல கோடி ரூபாய் மாவட்ட ஒன்றியங்களுக்கும் இணையத்துக்கும் இழப்பீடு ஏற்படும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்ய முடியாது. பால் ஒன்றியங்களிடம் இருந்து ஊக்கத்தொகை கிடைக்காது. இதனால், மீண்டும் தனியாருக்கு பால் வழங்கும் நிலை உருவாகும்.

எனவே, அரசு நிதியில் இருந்து லிட்டர் அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்குவதாக அறிவிக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப்படி கடந்த 2 ஆண்டுகளில் 32 சதம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பால் உற்பத்தியாளர்களுக்கோ வெறும் 15 சதம் மட்டுமே கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே, அரசு எங்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும், அரசுக்கு மேலும் அவகாசம் அளிக்கும் வகையிலும் ஜன.1-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பால் உற்பத்தி நிறுத்தம், சாலை மறியல் போராட்டம் ஆகியவற்றை பிப்.4-ஆம் தேதிக்கு ஒத்திவைப்பது என்று முடிவு செய்துள்ளோம்.

மேலும், இந்த இடைப்பட்ட காலத்தில் அரசியல் கட்சிகள், விவசாயச் சங்கங்கள், நலச் சங்கங்கள் நடத்தும் மாநாடு, கூட்டங்களில் கலந்து கொண்டு எங்களது கோரிக்கைகளை விளக்கிப் பேசி, ஆதரவு திரட்டுவது என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

### புதிய மீன்பிடி விசைப்படகுக்கு 50 சத மானியம்

தூண்டில் மற்றும் செவுள் வலை மூலம் மீன்பிடிப்பதற்கு ஏதுவாக புதிய விசைப்படகு தயாரிப்புக்கு மீனவர்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்.

அண்மைக் கடல் பகுதியில் அதிகரித்து வரும் மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், ஆழ்கடல் பகுதியிலுள்ள மீன்வள ஆதாரங்களை மிக நீண்ட காலம் பயன்படுத்திடவும், தூண்டில் மூலம் சூரை மீன் மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடிப்பு விசை படகினை கட்டும் மீனவர்களுக்கான புதிய திட்டத்தை செயல்படுத்தும் வகையில் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினைக் கட்டுமானம் செய்திட படகு ஒன்றுக்கு  செலவினத்தில் 50 சதம் அதிகபட்சமாக ரூ. 30 லட்சம் வரை மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த முழுநேர மீன்பிடித்தொழில் ஈடுபடும் மீனவர்கள் அதிகபட்சம் 6 போ்6 கொண்ட குழுவாகவோ அல்லது மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனிநபராகவோ இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை மீனவளத் துறையின் இணையதளமான

ஜ்ஜ்ஜ்.ச்ண்ள்ட்ங்ழ்ண்ங்ள்.ற்ய்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற முகவரியிலிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது விண்ணப்ப படிவங்களை மண்டல மீன்வளத்துறை  துணை இணை இயக்குநர் மற்றும் கடலோர மாவட்ட  மீன்துறை உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் அலுவலக நாட்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் மீன் துறை இணைய தளத்தில் உள்ள விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மீன்துறை இயக்குநர், நிர்வாக அலுவலக கட்டடங்கள், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை - 600 006 என்ற முகவரிக்கு பதிவு

அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 10.2.2014 பிற்பகல்  5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாநில அளவிலான பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படும்.

மேலும் இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் அல்லது திருச்சிராப்பள்ளி மண்டல மீன்வளத்துறை துணை இயக்குநரை நேரிலோ அல்லது 04322-220 069, 0431-2421 174 என்ற தொலைபேசி மூலமாகவோதொடர்பு கொள்ளலாம்.

### புதுக்கோட்டை பகுதியில் நெல் சாகுபடி குறித்த  பயிற்சி

புதுக்கோட்டை வட்டாரம் தோப்புபட்டி மற்றும் கூழியான் விடுதி ஆகிய கிராமங்களில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் திங்கள்கிழமை நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டை வேளாண்உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் இரா. பூபதிகண்ணன் நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி முறை தொடர்பான தொழில்நுட்பங்கள், பயிர்ப் பாதுகாப்பு முறை குறித்தும், விதை ஆய்வாளர் க. பாண்டி விதைத் தோ0வு, விதை நோ0த்தி, உயர் விளைச்சல் ரகங்களைப் பயன்படுத்துவதால் கூடுதல் மகசூல் பெற செய்ய வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கினர்.  ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் சீ. கலைச்செல்வி, ஜி. புனிதா, ஜெ. ரெங்கபாஷ்யம், அ. கோபாலகிருஷ்ணன், அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர் எல். அருளரசு ஆகியோர் செய்தனர்.

### ரூ. 25 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கட்சியின் அரியலூர் மாவட்ட சிறப்புப் பேரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலாளர் இரா. உலகநாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனைத்து சிறப்பு மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்தி, அதற்குரிய சிறப்பு மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அரியலூரை சுற்றி அமைக்கப்பட்டுள்ள தனியார் சிமெண்ட் ஆலைகளில் இப்பகுதியை சேர்ந்தவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுவதோடு, ஆலைக்கு நிலம் கொடுத்துள்ள கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள், கல்வி, மருத்துவம், சாலை, குடிநீர் ஆகியவற்றை ஆலை நிர்வாகம் செய்து கொடுக்க வேண்டும்.

நிகழாண்டிலும், கடந்த ஆண்டிலும் போதுமான பருவமழை பெய்யாததால், அரியலூர் மாவட்டம் முழுவதும் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சாகுபடி செய்து மழையின்றி நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரமும், சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரமும் தமிழக அரசு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

திருந்திய நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் யூரியா மற்றும் இலவச உர மானிய சலுகை வழங்க வேண்டும். 100 நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு முழு ஊதியமான ரூ. 148 வழங்க வேண்டும். ஆழ்குழாய் போட்டு பல மாதங்களாக மின் இணைப்புக்கு காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 60 வயது நிரம்பிய அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தொழிற்கல்வி பயிலும் விவசாயிகளின் வாரிசுகளுக்கு அரசு வங்கிகள் மூலமாக காலதாமதமின்றி கல்விக் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே. சுப்பராயன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம், மாநில

கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் அ. வேணுகோபால் ஆகியோர் மக்களவைத் தேர்தல் குறித்து பேசினர்.

மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி. தண்டபாணி, ஜி. ஜெயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் திருமானூர் ஒன்றியச் செயலாளர் ஜி. ஆறுமுகம், அரியலூர் பகுதிக் குழு ஜி. ராஜேந்திரன், தா.பழூர் ஒன்றியச் செயலாளர் எஸ். அபிமன்னன், ஜயங்கொண்டம் ஒன்றியச் செயலாளர் எஸ். ராமநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கோமாரி நோய் அச்சம்: நெல்லை மாவட்டத்தில் ஆட்டுச் சந்தைக்குத் தடை

கோமாரி நோய் தாக்குதல் அச்சம் காரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் ஆட்டுச் சந்தைக்கு தாற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆட்டுச் சந்தை திங்கள்கிழமை கடையத்திலும், செவ்வாய்க்கிழமை மேலப்பாளையத்திலும், வியாழக்கிழமை பாவூர்சத்திரத்திலும், வெள்ளிக்கிழமை முக்கூடலிலும், சனிக்கிழமை ஆலங்குளத்தை அடுத்த ரெட்டியார்பட்டியிலும் கூடுகிறது. இந்தச் சந்தைகளில் திருநெல்வேலி மட்டுமல்லாமல் பிற மாவட்டங்களில் இருந்தும், கேரளத்திலிருந்தும் வியாபாரிகள் கூடி ஆடுகளை வாங்கிச் செல்வது வழக்கம்.

இப்போது ஆடு, மாடுகளைத் தாக்கும் கோமாரி நோய் பரவலாக பரவி வருகிறது. நோய்த் தாக்குதல் உள்ள இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் ஆடு, மாடுகளால் நோயின் தாக்குதல் அதிகமாகக்கூடும் என்பதால் ஒரு மாத காலம் அதன் விற்பனைக்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆலங்குளம் வட்டாட்சியர் ரதி (எ) லெட்சுமியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது: கால்நடைகளுக்கு வேகமாகப் பரவிவரும் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வெளிமாநிலங்களிலிருந்து வரும் கால்நடைகளை வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, ரெட்டியார்பட்டியிலும் கால்நடைகளின் விற்பனையைத் தடை செய்துள்ளோம். இந்தத் தடை ஒரு மாத காலம் அமலில் இருக்கும் என்றார்.

இதுகுறித்து ரெட்டியார்பட்டி சந்தைக்கு வந்த, கிருஷ்ணபேரியைச் சேர்ந்த ஆடு வியாபாரி சேர்மன் கூறியதாவது: இந்தத் தடை குறித்து எங்களிடம் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை. சனிக்கிழமை ஆடு வியாபாரத்துக்காக வந்த எங்களை வியாபாரம் செய்யவிடாமல் போலீஸார் தடுத்துவிட்டனர். முன்கூட்டியே தகவல் அளித்திருந்தால் ஆடுகளை வெளியில் வாங்காமல் இருந்திருப்போம் என்றார்.

### கரும்பு ஏக்கருக்கு ரூ.10,000 நிவாரணம் வழங்கக் கோரிக்கை

வெலிங்டன் பாசனப் பகுதியில், கரும்பு நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விவசாய சங்க வட்டக் குழு கூட்டம், வட்டச் செயலர் ராதாகிருஷ்ணன் தலைமையில் திட்டக்குடியில் அண்மையில் நடைபெற்றது. வட்டகுழு உறுப்பினர்கள் பரமசிவம், ராமசாமி, ராமானுஜம், தமிழரசன், பழனிசாமி, ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சந்திரகாசு வரவேற்றார். மாவட்ட செயலர் ரங்கசாமி, மாவட்டக் குழு உறுப்பினர் மகாலிங்கம், வட்ட செயலர் முருகையன் ஆகியோர் பேசினர். இக் கூட்டத்தில் பெண்ணாடம் ஸ்ரீஅம்பிகா சர்க்கரை ஆலை நிர்வாகம் முத்தரப்பு கூட்டத்தை கூட்டி, விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை வழங்கவும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 4,000 வழங்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கையெடுக்க வேண்டும். கரும்பு வெட்டும் கூலி, வாகன வாடகை ஆகியவற்றை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். வெலிங்டன் பாசனப் பகுதியில் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்.

வெள்ளாற்றில் மாட்டு வண்டிகள் மூலம் மணல் எடுக்க அனுமதிக்க வேண்டும். ஆதார் அட்டை கேட்டு பொது மக்களை அலைக்கழிக்கும் கேஸ் ஏஜென்சிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வட்டாட்சியர் அலுவலகம் முன் வரும் 30-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரிக்கை

புதுச்சேரியில் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என அகில இந்திய விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

அச்சங்கத்தின் புதுச்சேரி பிரதேசக் குழுக் கூட்டம் சங்கத்தின் தலைவர் எஸ்.பத்பநாபன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் செயலாளர் வே.சங்கர் மற்றும் ஜி.ராமசாமி, ஆர்.ராமமூர்த்தி, கே.கருணாகரன், பி.பாலச்சந்தர், ஆர்.முத்துக்குமரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்: புதுச்சேரியில் கரும்பு விவசாயிகள் கரும்புக்கு நியாயமான விலை கோரி தொடர்ந்து போராடியும் அரசிடம் மனுவும் கொடுத்து வருகின்றனர். ஆனால், இன்றுவரை புதுச்சேரி அரசு கரும்பு விலையை அறிவிக்கவில்லை. கடந்த ஆண்டு புதுச்சேரி அரசின் கீழ் செயல்பட்டு வரும் எல்.ஆர்.பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 2,325ம், அரியூர் தனியாரின் இ.ஐ.டி. பாரி ஆலையில் ரூ.2,350 கொடுத்தனர். ஒரே மாநிலத்தில் இரண்டு விதமான கரும்பு விலை கொடுக்கப்படுவது வேதனைக்குரியதாக உள்ளது.

அரைவைப் பருவம் தொடங்கியுள்ள நிலையில், இந்த ஆண்டு (2013-2014) மத்திய அரசு டன் ஒன்றுக்கு ரூ. 400 உயத்தியுள்ளது. புதுச்சேரி அரசு கரும்புக்கான விலை நிர்ணயம் செய்யாதது கண்டனத்துக்குரியதாகும்.

மத்திய அரசு இக்காலத்தில் உரம் பூச்சிக்கொல்லி மருந்து உள்பட இடுபொருள்களின் விலையை உயர்த்தியுள்ள நிலையில், கரும்பு உற்பத்தி செலவும் அதிகரித்துள்ளது.

விவசாயிகளுக்கு சலுகை அளிக்க மறுக்கும் மத்திய அரசு சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு வட்டியில்லாக் கடனை வழங்கி வருகிறது. அதே நேரத்தில், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,100 மட்டுமே என்ற மத்திய அரசின் அறிவிப்பு கரும்பு விவசாயிகளை வஞ்சிப்பதாகும். இந்நிலையில், புதுச்சேரி அரசு கரும்பு

விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் கூடுதல் விலை வழங்க முன்வரவேண்டும். டீசல் விலை, வெட்டுக்கூலி போன்றவை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக கரும்பு விவசாயிகள் நியாயமான கோரிக்கையை முன்வைக்கிறார்கள். மேலும், நெருக்கடியான சூழ்நிலையால் கரும்பு சாகுபடியை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புதுச்சேரி மாநில மக்களுக்குத் தேவையான பாலை நாம் உற்பத்தி செய்யவில்லை. நமக்குத் தேவையான பாலை உற்பத்தி செய்ய வாய்ப்பிருந்தும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. நமக்குத் தேவையான பாலில் 80 சதவீதத்தை வெளி மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கும் அவல நிலை தொடருகிறது.

வெளி மாநிலத்தில் வாங்கும் விலை கூட புதுச்சேரி பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை. தமிழ் நாட்டில் பால் உற்பத்தியை பெருக்க பால் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளார்கள். புதுவையில் தேவையான பாலை உற்பத்தி செய்ய பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும். மேலும், பால் உற்பத்தியை பெருக்க தொடங்கிய சிறுபால் பண்ணை உற்பத்தி திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தாததும் பால் உற்பத்தி குறைவுக்கு காரணமாகும்.

எனவே, இனிமேல் உண்மையான பால் உற்பத்தியாளர்களுக்கு பான்லே நிறுவனம் மூலமாக மாடு வாங்கித் தர வேண்டும். பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ரூ.26-ம் எருமைப்பாலுக்கு ரூ.35-ம் உயர்த்தித் தரவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வேளாண் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. கோவை, மதுரை, திருச்சி வேளாண்மைக் கல்லூரிகளில் இந்தப் பயிற்சி நடத்தப்பட உள்ளது.

இதில் விதை உற்பத்தி, செடிகள் வளர்ப்பு, உயிர் உரங்கள், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பண்ணை இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக் கூட்டும் தொழில்நுட்பங்கள், நுண்ணீர்ப் பாசனம், பசுமைக் குடில் தொழில்நுட்பங்கள் போன்ற பாடங்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பங்குபெற குறைந்தபட்ச கல்வித்தகுதியாக பட்டயப் படிப்பு முடித்திருக்க வேண்டும். வேளாண் பட்டப் படிப்பு முடித்தவர்களும் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ள நபர்கள் தங்களது பெயரை தலைவர், பயிற்சிப் பிரிவு, வேளாண் விரிவாக்க இயக்ககம், கோவை என்ற முகவரியில் அணுகலாம். தொலைபேசி எண் 0422- 661 1520.

முதல்வர், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை (0452- 242 2985, 242 2956, 242 2252 மற்றும் சிறப்பு அதிகாரி தோட்டக்கலை கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலையம், திருச்சி (0431- 291 8033, 291 8034, 94896 04188) ஆகிய எண்களிலும் தொடர்புகொண்டு பதிவு செய்யலாம்.தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு, நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன் தகவல் அளிக்கப்படும் என்று, வேளாண்மைப் பல்கலைக்கழக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

உறைபனியில் மலர்கள் பாதிப்பு பாதுகாக்க பிளாஸ்டிக் போர்வைகள்

ஊட்டி: நீலகிரி பூங்காக்களில், உறைபனியிலிருந்து மலர் செடிகளை பாதுகாக்க, பிளாஸ்டிக் போர்வை அமைக்கும் பணி நடந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில், சூஜிரோ' டிகிரி செல்சியஸ் காலநிலை உள்ளது,

உறைபனியால், பூங்காங்களில், மலர்களும் கருகி வருகின்றன. ஊட்டி, தாவரவியல் பூங்கா, குன்னூர், சிம்ஸ் பூங்கா, காட்டேரி பூங்காவில் மலர் செடிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. இதை அடுத்து, பிளாஸ்டிக் போர்வை போர்த்தி, மலர் செடிகளை பாதுகாக்கும் பணி நடந்து வருகிறது. இதேபோன்று, தேயிலை செடிகளை பாதுகாக்க, "கோத்தகிரி மலார்' என்ற காட்டுச்செடிகளை வைத்து, மூடும் பணியில் சிறு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

**சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு பாதிப்பு**



"மத்திய அரசின் தவறான சுங்க வரி விதிப்பால், நாட்டின் சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன" என, கோத்ரெஜ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் இயக்குனர் தோரப் மிஸ்திரி தெரிவித்தார்.

**பாமாயில்:**மும்பையில் அவர், செய்தியாளர்களிடம் பேசியதாவது:இந்தியா, கச்சா பாமாயில் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் ஆகியவற்றை, இந்தோனேஷியா, மலேஷியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. மேற்கண்ட நாடுகள், உள்நாட்டு சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களை பாதுகாக்கும் பொருட்டு, சாதகமான ஏற்றுமதி வரியை நிர்ணயித்து உள்ளன.

ஆனால், மத்திய அரசு அது போன்ற நடைமுறையை கடைபிடிக்காததால், சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங் களின் உற்பத்தி பெருமளவு குறைந்துவிட்டது. இறக்குமதியாகும் கச்சா பாமாயிலுக்கு தற்போது, 2.5 சதவீதம் சுங்க வரி விதிக்கப் படுகிறது. அது போன்று, இறக்குமதியாகும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலுக்கு, 7.5 சதவீதம் சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதனால், இந்த இரண்டுக்கும் உள்ள வரி வித்தியாசம், 5 சதவீதமாக குறைந்துள்ளது.

**இந்தோனேஷியா:**அதே சமயம், இந்தோனேஷிய அரசு, கச்சா பாமாயிலுக்கான ஏற்றுமதி வரியை, 9 சதவீதத்தில் இருந்து, 12 சதவீதமாக உயர்த்தி உள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலுக்கான ஏற்றுமதி வரி, 3 சதவீதமாக குறைத்து நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம், அந்நாட்டின் சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள், முழு உற்பத்தி திறனில் செயல்பட முடிகிறது.

ஏற்றுமதி வரி குறைவால், கச்சா பாமாயிலை விட, சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலின் இறக்குமதி விலை, டன்னுக்கு, 30 டாலர் என்ற அளவில் குறைவாக உள்ளது. இதனால், இந்தியா அதிக அளவில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலை இறக்குமதி செய்து வருகிறது. கச்சா பாமாயில் இறக்குமதி குறைந்துவிட்டது.

**உற்பத்தி திறன்:**இந்த நிலையை மாற்றவும், சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள், முழு உற்பத்தி திறனில் செயல்படவும், மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இறக்குமதியாகும் கச்சா பாமாயில் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலுக்கு, முறையே, 7.5 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என்ற அளவில் சுங்க வரி விதிக்க வேண்டும். வரி வித்தியாசம் குறைந்தால், கச்சா பாமாயில் இறக்குமதி

அதிகரிக்கும் என்பதோடு, உள்நாட்டு சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் மூடப்படும் நிலையும் தவிர்க்கப்படும்.இவ்வாறு, தோரப் மிஸ்திரி தெரிவித்தார்.

**'நாட்டின் கச்சா பட்டு உற்பத்திஇரண்டு மடங்கு உயரும்'**



பெங்களூரு:"வரும், 2016–17ம் நிதியாண்டில், இந்தியாவின் கச்சா பட்டு உற்பத்தி, இரு மடங்கு அதிகரித்து, 4,600 கோடி டன்னாக உயரும்", என, மத்திய ஜவுளி துறை அமைச்சர் கே.சாம்பசிவ மூர்த்தி தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது:நாட்டின் கச்சா பட்டு உற்பத்தியை அதிகரிக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு, 12வது ஐந்தாண்டு திட்டத்தில், வரும், 2016–17ம் நிதியாண்டில், நாட்டின் கச்சா பட்டு உற்பத்தி, 20–25 சதவீதம் வளர்ச்சி கண்டு, 4,600 கோடி டன்னாக உயரும்.

அப்போது, மல்பெரி பட்டு விவசாயம், 1.96 லட்சம் ஹெக்டேரில் இருந்து, 3 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும்.தேசிய பட்டு வாரியம், பட்டுப் பூச்சி வளர்த்தல் தொடர்பான பல்வேறு நடைமுறைகள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏராளமானோர் பயன்பெறும் வண்ணம், பயிற்சி முகாம்களை நடத்த வேண்டும்.பட்டு உற்பத்தியை மேம்படுத்துதல், நோய் தடுப்பு நடவடிக்கைகள், பட்டுப்பூச்சி உற்பத்தி, தரமான பட்டுப் பூச்சிக்கூடு உற்பத்தி, பட்டு நூலிழை பிரிப்பு, பதப்படுத்துதல், பட்டு நெசவு மற்றும் துணை பொருட்கள் தயாரிப்பு, என, இத்துறையில் சுயவேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளன.இவை,

ஏராளமானோரின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வருவாய்க்கும் வழி வகுப்ப-வையாக உள்ளன. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## யூரியாவுக்கு மானியம்: மத்திய அரசு முடிவு?

புதுடில்லி: யூரியா தயாரிப்பு செலவு அதிகரித்துள்ளதால், தங்களுக்கான மானியத்தை அதிகரிக்க வேண்டுமென, யூரியா தயாரிக்கும் உர நிறுவனங்கள், மத்திய அரசை வலியுறுத்தி வந்தன. ஒரு டன் யூரியாவுக்கு, 700 ரூபாய் மானியம் அளித்தால் தான், தயாரிப்பு செலவை ஈடுகட்ட முடியும் என, அந்த நிறுவனங்கள் தெரிவித்திருந்தன. இதையடுத்து, மானிய தொகையை, ஒரு டன்னுக்கு, 350 ரூபாய் அதிகரிக்க, மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

## பருத்தி சந்தையில் அமைச்சர் ஆய்வு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சியில் நேற்று நடந்த பருத்தி வார சந்தையினை அமைச்சர் மோகன் பார்வையிட்டார்.

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. மொத்தம் 147 விவசாயிகள் 2,106 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

பருத்தி வார சந்தையினை அமைச்சர் மோகன் நேற்று காலை நேரில் பார்வையிட்டு, சந்தையின் நடைமுறைகள் குறித்து கேட்டறிந்தார். எம்.எல்.ஏ., அழகுவேலுபாபு, ஆர்.டி.ஓ., குணசேகரன், நகர சேர்மன் பாலகிருஷ்ணன், ஒன்றிய சேர்மன்கள் ராஜசேகர், அரசு, கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குனர் பாண்டியன், ஒன்றிய துணை சேர்மன் கண்ணன், மாவட்ட கவுன்சிலர் மணி, நகராட்சி கவுன்சிலர்கள் குட்டி, முருகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க., அரசின் சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்களை அமைச்சர் மோகன் விவசாயிகளிடம் வழங்கினார். இதில், நகர செயலாளர் பாபு, சி.எம்.எஸ்., தலைவர் பச்சையாப்பிள்ளை, துணை தலைவர் ராஜி கலந்து கொண்டனர். நேற்று எல்.ஆர்.ஏ., ரகம் மற்றும் சுவீன் ரகம் உள்ளிட்ட 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. அடுத்த வாரம் புதன்கிழமை ஆங்கில புத்தாண்டு தினமாக இருந்தாலும் வழக்கம் போல் விடுமுறையின்றி பருத்தி வார சந்தை வழக்கம்போல் கூடுகிறது.

**சாகுபடியாளர்கள் கடும் அதிர்ச்சி வெங்காயம் விலை திடீர் வீழ்ச்சி**

மேட்டூர்: சிறிய, பெரிய வெங்காயம் விலை திடீரென வீழ்ச்சியடைந்தது, மேட்டூர் சுற்றுப்பகுதி விவசாயிகளை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இரு மாதத்துக்கு முன், வடமாநிலங்களில் உற்பத்தி குறைவு மற்றும் வரத்து சரிவு காரணமாக, தமிழகம் முழுவதும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ, 50 முதல், 70 ரூபாய்க்கும், சின்னவெங்காயம், 60 முதல், 80 ரூபாய்க்கும் விற்பனையானது. வெங்காயம் சாகுபடி செய்வதன் மூலம் அதிக வருவாய் ஈட்ட முடியும் என விவசாயிகள் நினைத்தனர்.

இதனால், இரு மாதத்துக்கு முன், மேட்டூர், காவிரி கரையோரம், கோல்நாயக்கன்பட்டி, நவப்பட்டி, ரெட்டியூர், தெற்கத்திகாடு, சாணாவூர் சுற்றுப்பகுதியில், 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் விவசாயிகள் பெரிய மற்றும் சிறிய வெங்காயம் சாகுபடி செய்தனர்.

அறுவடைக்கு இன்னமும் இரு வாரங்களே உள்ள நிலையில், வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது விவசாயிகளை கடும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து கோல்நாயக்கன்பட்டி அடுத்த சங்கிலி முனியப்பன் கோவில் பகுதி காளியப்பன் கூறியதாவது:

வெங்காயம் விலை அதிகரித்ததால், லாபம் கிடைக்கும் என கருதி நடப்பாண்டு, எங்கள் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்தனர். நாங்கள் அரை ஏக்கர் நிலத்தில் பெரிய வெங்காயம் சாகுபடி செய்துள்ளோம். இரு வாரங்களில் வெங்காயம் அறுவடைக்கு தயாராகி விடும்.

இந்நிலையில், சாகுபடி செய்யும்போது, வியாபாரிகள் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை விவசாயிகளிடம், 60 ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர். அந்த சமயத்தில் வெங்காயம் அறுவடை செய்த விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது. குறைந்தபட்சம் ஒரு கிலோ பெரிய வெங்காயம், 20 ரூபாய்க்கு மேல் விற்றால் மட்டுமே விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும்.

தற்போது அறுவடை துவங்கிய நிலையில் வெங்காயம் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்து விட்டது. வியாபாரிகள் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை

விவசாயிகளிடம், 15 முதல், 20 ரூபாய்க்கு நேரடி கொள்முதல் செய்கின்றனர். இரு வாரத்தில் சந்தைக்கு வெங்காயம் வரத்து அதிகரிக்கும் என்பதால், விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. இதனால், மேட்டூர் அருகே, காவிரி கரையோர பகுதியில் வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

**துவரை சாகுபடி விவசாயிக்கு பயிற்சி**

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூரில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட பயிறு இயக்கத்தில், விவசாயிகளுக்கு துவரை நடவு மற்றும் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.

அலவாய்பட்டி பஞ்சாயத்து தலைவர் ராஜா தலைமை வகித்தார். வெண்ணந்தூர் வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன் வரவேற்றார். துவரை நடவு சாகுபடி, அரசின் திட்டம் மற்றும் மானியம், வேளாண் இயந்திரங்கள் பெறுதல் குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் வசுமதி, துணை அலுவலர் பசுபதி, உதவி தோட்டக்கலை அலுவலர் வசந்தகுமார், ஆத்மா திட்ட அலுவலர் ரமேஷ், வெண்ணந்தூர் நிலவள வங்கி தலைவர் நடராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மொச்சை விலை உயர்வால் வியாபாரிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: மொச்சை விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், வடக்கிழக்கு பருவமழையை முன்னிட்டு சோளம், 12 ஆயிரம் ஹெக்டேர் வரையிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

இதில், ஊடுபயிராக மொச்சை, தட்டை பயிறு உள்ளிட்ட பயிர்கள், 5 ஆயிரம் ஹெக்டர் வரை சாகுபடி செய்யப்படுகிறது. சில ஆண்டாக, மாவட்டத்தில் போதிய பருவமழை இல்லாததால், சோளம் மற்றும் ஊடுபயிர்களின் சாகுபடி வெகுவாக குறைந்து வந்தது.

இந்தாண்டு, கணிசமாக பெய்த வடகிழக்கு பருவ மழையால், சோளம் மற்றும் ஊடுபயிர்களான மொச்சை, தட்டை பயிறு ஆகியவற்றை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் பயிரிட துவங்கி உள்ளனர்.

மாவட்டத்தில் நிலவிய காலநிலை காரணமாக, சோளம்,மொச்சை, தட்டை பயிறுகளின் வளர்ச்சி அமோகமாக உள்ளது. சில தினங்களாக மொச்சை மற்றும் தட்டை பயிறு விற்பனைக்கு வரத்துவங்கிய நிலையில், அவற்றுக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.


இது குறித்து, தர்மபுரியை அடுத்த பூலப்பட்டியை சேர்ந்த விவசாயி சேவியர் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்ததால், சோளத்தையும், அதன் ஊடுபயிராக மொச்சை, தட்டை பயிறு ஆகியவற்றையும், விவசாயிகள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது, மொச்சை ஒரு கிலோ, 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டை விட, ஒரு கிலோவுக்கு, 10 ரூபாய் கூடுதலாக விலை கிடைத்துள்ளது. இது சாகுபடிக்கு கட்டுபடியான விலையாக உள்ளதால், விவசாயிகளுக்கு ஓரளவுக்கு வருவாய் கிடைக்கும்.

மேலும், ஆண்டில் குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் விற்பனைக்கு வரும் பச்சை மொச்சை, தட்டை பயிறு ஆகியவற்றை, பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்வதால், வரும் தினங்களில் மொச்சை வரத்து சற்று அதிகரித்தாலும், விலையில் மாற்றம் ஏற்படாது, என்றார்.

### மல்பெரியில் இலைச் சுருட்டுப் புழு



டையபானியா பல்வெருலண்டாலிஸ் என்னும் இலைச் சுருட்டுப்புழு மல்பெரி இலைகளை அதிக அளவில் சேதப்படுத்துவதால் பட்டுப் புழு வளர்க்கும் விவசாயிகள் தங்களது மல்பெரி தோட்டத்தில் இலை சுருட்டுப்புழுக்களின்

தாக்குதல் இல்லாதவாறு பாதுகாக்க வேண்டும். பொதுவாக இவை எல்லா மாதங்களிலும் தென்பட்டாலும் ஆகஸ்டு முதல் மார்ச்சு வரை புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதன் தாய் பூச்சிகள் 1செ.மீ. நீளத்தில் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் இறக்கைகளில் கறுப்பு நிற அலைகள் போன்று கோடுகள் காணப்படும்.

பெண் பூச்சிகள் மல்பெரி செடியின் ஒவ்வொரு கிளையின் நுனி குருத்துப் பகுதியில் 1 அல்லது 2 முட்டைகள் இடுகின்றது. இதுபோல் ஒரு பூச்சி 100 முட்டைகள் வரை இடும். முட்டையில் இருந்து இளம்புழுக்கள் 3-4 நாளில் வெளிவரத் தொடங்கும். இளம்புழுக்கள் நன்கு விரிவடையாத இளம் தளிர் இலைகளின் விளிம்புகளை ஒருவித இழையால் பிணைத்துக் கொண்டு உள்ளே இருந்து தளிர் இலைகளை சேதப்படுத்துகின்றது. சற்று வளர்ந்த புழுக்கள் பசுமை கலந்த பழுப்பு நிறத்துடனும் பக்கவாட்டில் கறுப்பு நிற புள்ளிகளுடனும் காணப்படும். புழுப்பருவம் 10-15 நாட்கள் வரை இருக்கும். சற்று வளர்ந்த புழுக்கள் இளந்தளிர்களுடன் கூடிய தண்டுப் பகுதியையும் சேர்த்து சேதப்படுத்துவதால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. நீர்ச்சத்து நிறைந்த தளிர் இலைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதால் புழுவளர்ப்பில் நமக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது. இப்புழுக்களின் பாதிப்புகளில் இருந்து தோட்டத்தை பாதுகாக்க கீழ்க்கண்ட தடுப்பு முறைகளை கையாளலாம்.

1.பாதிப்பு மிகவும் குறைவாக இருந்தால் பாதிக்கப்பட்ட செடிகளின் நுனிப்பகுதிகளை பாதுகாப்பாய் கிள்ளி ஒரு பாலிதின் பையில் சேகரித்து அதை எரியும் நெருப்பில் இட்டு அழித்து விட வேண்டும்.

2.தோட்டத்தின் உள்ளே சிறிய பறவைகள் வந்து உட்காரும் வண்ணம் சில குச்சிகளை தோட்டத்தின் நடுவே அங்காங்கே ஊன்றி வைத்தால் சிறிய பறனைகள் இந்த இளம் புழுக்களை உணவாக்கி கொள்கின்றது.

3.பாதிப்பு அதிகமாக இருந்தால் பூச்சி மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

இதற்கு தோட்ட கவாத்து பணிகள் ஆரம்பித்து 20நாள் கழித்து நுவான் (76இசி) என்ற மருந்தை 2 மிலி/1 லிட்டர் நீரில் கலந்து செடிகள் நன்றாக நனையும் படி தெளிக்க வேண்டும். 10 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை ரோகர் (30இசி) 3 மிலி/1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 1 ஏக்கர் தோட்டத்திற்கு 150 லிட்டர் மருந்து கரைசல் தேவைப்படும். மருந்து தெளித்து 15 நாட்கள் கழித்து இலைகளைப் பறித்து புழுக்களுக்கு உணவாக கொடுக்கலாம்.

4. பூச்சி மருந்து தெளித்து ஐந்து நாட்கள் சென்ற பிறகு ட்ரைகோக்ரம்மா கைலோனிஸ் என்னும் முட்டை ஒட்டுண்ணியை 1 ஏக்கருக்கு 4சிசி என்ற அளவில் 7 நாள் இடைவெளியில் இரண்டு முறை பயன்படுத்த வேண்டும். ஒட்டுண்ணி அட்டைகளை தோட்டத்தில் கட்டிய பிறகு பூச்சி மருந்து அடிப்பதை கண்டிப்பாக தவிர்த்து விட வேண்டும்.

5. புழு ஒட்டுண்ணிகளை (பிரகான் குளவி) ஒரு ஏக்கருக்கு 200 குளவிகள் வீதம் கவாத்து செய்த 30 நாட்கள் கழித்து விடவும்.

6. இரவு நேரங்களில் (7 மணி முதல் 10 மணி வரை மட்டும்) 200 வாட்ஸ் பல்புகளை விளக்குப் பொறியாக அமைத்து அந்தப்பூச்சிகளை கவர்ந்திழுத்து எளிதில் அழிக்கலாம்.

மேற்கண்டவாறு ஒருங்கிணைந்த தடுப்பு முறைகளையும் அனைத்து பட்டு விவசாயிகளும் தங்களது தோட்டத்தில் கடைபிடித்தால் இப்பூச்சியின் தாக்குதலில் இருந்து தோட்டத்தை பாதுகாத்து தரமான இலைகளை புழுக் களுக்கு உணவாக அளித்து தரமான பட்டுக் கூடுகளை நாம் அறுவடை செய்ய முடியும்.

**தகவல்:-** அ.ஞானகுமார் டேனியல்,
த.சிவசுப்ரமணியன், விஞ்ஞானிகள்,
மதுரை-625 402.
**தொலைபேசி எண் :** 0452-246 3455, 94884 00952, 94868 56814.

நவீன தொழில்நுட்பம்



**தீவனப்பற்றாக்குறைக்கு மர இலைகள்**: மர இலைகளில் உள்ள ஊட்டச்சத்தின் அளவு வறட்சியினால் பாதிக்கப்படுவதில்லை. சுபாபுல், கிளைரிசிடியா, அகத்தி, வாகை, வேம்பு, கொடுக்காப்புளி, கல்யாண முருங்கை போன்றமரங்களின் இலைகள் சிறந்த பசுந்தீவனங்களாகும்.

மற்ற பசுந்தீவனங்களைக் காட்டிலும் மர இலைகள் ஊட்டச்சத்து மிகுந்ததாக உளளன. பொதுவாக 10 முதல் 15 சதம் வரை புரதச்சத்தும், 40 முதல் 65 சதம் வரை மொத்த செரிக்கக்கூடிய ஊட்டச்சத்துக்களும் உள்ளன. (உலர் தீவன அடிப்படையில்) சூபாபுல், அகத்தி போன்ற மர இலைகளில் 20 -25 சதவீத புரதச்சத்தும் உள்ளன.

மர இலைகளின் புரதச்சத்து அசைபோட்டும் கால்நடைகளின் வயிற்றில் நுண்ணுயிர்களால் அவ்வளவாக சிதைக்கப்படுவதில்லை. அப்படி சிதைக்கப்படாத மீதமுள்ள புரதம் சிறுகுடலில் செரிக்கப்படுவதால் கால்நடைகளுக்கு சிறந்த பயனைக் கொடுக்கிறது. மரங்களின் காய்களும் புரதச்சத்து மிகுந்ததாக காணப்படுகின்றன.

இத்துடன் உயிர்ச்சத்து "ஏ'வும் மர இலைகளின் மூலம் கிடைக்கின்றது. அகத்தி, முருங்கை, ஆச்சான் போன்ற மரங்களின் நார்ச்சத்து புற்களில் இருப்பதைவிட மிகக்குறைவாகவே இருப்பதால் இதன்மூலம் கால்நடைகளுக்கு கிடைக்கும் எரிச்சத்தும்குறைவாகவே இருக்கும். எனவே மர இலைகளையே முழுமையாயன பசுந்தீவனத்திற்கு மாற்றாக கால்நடைகளுக்கு தீவனமாக அளிப்பது நல்லதல்ல. மர இலைகளை நார்ச்சத்து மிக்க வேளாண் கழிவுகளுடன் சேர்த்து தீவனமாக அளிக்க வேண்டும். வேளாண் கழிவுகளை 1" - 2" அளவில் சிறு சிறு துண்டுகளாக

வெட்டி நிலக்கடலைக்கொடி 75 சதவீதத்துடன் வேம்பு இலை அல்லது சவுண்டல் இலையை 25 சதவீதமாகவும் சோளத்தட்டை 50 சதவீதத்துடன் கிளைரிசிடியா, வேம்பு இலைகளை முறையே 25, 25 சதவீதமாகவும், கேழ்வரகு தட்டை 75 சதவீதத்துடன் கிளைரிசிடியா, வேம்பு இலைகளை முறையே 12, 13 சதவீதமாகவும் அளிக்க வேண்டும்.

அரிசி, கோதுமைத்தவிடுகளில் மணிச்சத்து சற்று அதிகமாக உள்ளது. எனவே மர இலை தீவனங்களுடன் எரிசக்தியாக புற்களையும், மணிச்சத்துக்காக தாவரங்களையும் சேர்த்து அளிப்பதால் ஓரளவு ஊட்டச்சத்துநிரம்பிய தீவனம் கால்நடைகளுக்கு கோடையில் கிடைக்கும்.

ஊட்டச்சத்து மிகுந்த மர இலைகளை சில கால்நடைகள் உண்ணத்தயங்கும். இதைத் தவிர்க்க:

* மர இலைகளைப் பிற புற்களுடன் சிறிது சிறிதாக சேர்த்து அளித்து கால்நடைகளுக்குப் பழக்கப்படுத்தலாம்.

* காலையில் வெட்டிய இலைகளை மாலை வரையும், மாலையில் வெட்டிய இலைகளை அடுத்தநாள் காலை வரையும் வாடவைத்து பயன்படுத்தலாம்.

* மர இலைகளை காயவைத்து அவற்றின் ஈரப்பதத்தை சுமார் 15 சதவீதத்திற்கும் கீழே குறைப்பதன்மூலம் அவற்றை நீண்டநாட்கள் சேமிக்க இயலும். தவிர இவற்றில் இருக்கும் நச்சுப் பொருட்களின் அளவும் கணிசமாக குறையும்.

* மர இலைகளின் வேம்பு சுமார் 2 சதவீத சமையல் உப்பு கரைசலைத் தயாரித்து தெளித்து அளிப்பதால் உப்புக்கலவையில் கவரப்பட்ட கால்நடைகள் இலைகளை விரும்பி உண்ணும்.

* மர இலைகளின்மீது வெல்லம் கலந்த நீரை ஓரிரு நாட்கள் தெளித்து அவற்றைக் கால்நடைகளுக்கு அளிக்கலாம்.

* மர இலைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளையும் அருகருகே கட்டி மர இலைகளைத் தீவனமாக அளித்தால் இலைகளை உண்ணக்கூடிய கால்நடைகளைப் பார்த்து பிற கால்நடைகளும் உண்ண ஆரம்பிக்கும்.

மர இலைகள் தினமும் சிறிய அளவில் அளித்து அவற்றைப் பழக்கப்படுத்த வேண்டும். கால்நடைகள் ஒரே வகையான மர இலைகளை எப்போதும்

விரும்புவதில்லை. தீவனம் அளிக்கும் சமயம் ஒன்றுக்கு மேற்படி இலைக் கலவையை அளிப்பது சிறந்தது. ஒரு கறவை மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு 8-10 கிலோ வரை மர இலைகளை அளிக்கலாம்.

ஆடுகளில் குறிப்பாக வெள்ளாடுகளுக்கு மர இலைக்கலவை இல்லாமல் தீவனம் அளிக்கவல்லது. 50 சதவீதம் புல் கலவையும், 20 சதவீதம் மர இலைக்கலவையும் கொடுப்பது அவசியமாகிறது.(தகவல்: முனைவர் எம்.முருகன், இயக்குநர், கோழியின உற்பத்தி மற்றும் வேளாண்மை நிலையம், ஓசூர்-638 110)

**-டாக்டர் கு.செளந்தரபாண்டியன்**

**கிணற்று பாசனத்தில் நெல் சாகுபடி: ஏக்கருக்கு 8 டன் மகசூல் சாதனை**

கிணற்று பாசனத்தில் திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 8 டன் மகசூல் செய்த சோழவந் தான் விவசாயி சேகர்,40, சாதனை படைத்துள்ளார். இவர், தனது 3 ஏக்கர் நிலத்தில் எல்.எல்.ஆர்., 34449 குறுகிய நெல் ரகத்தை பயிரிட்டார்.

**அவர் கூறியதாவது:** கிணற்று பாசனத்தின் மூலம் "அட்மா' திட்டத்தில், திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட்டேன். வேளாண்மைதுறை உதவி இயக்குனர் ராமநாதன் அடிக்கடி நடத்திய ஆய்விலும், வேளாண் அலுவலர்கள் பானுமதி, மார்க்கண்டன் அறிவுரையில், அடி உரமாக அசோஸ்பையிரில்லம், காம்ளக்ஸ் மேலுாரமாக யூரியா, பொட்டாஷ் இட்டு, கோளடாவீடர் கருவி மூலம் மூன்று முறைகளை எடுக்கப்பட்டது. பூச்சிமருந்து தெளிக்கப்பட்டது. உரச் சிக்கனத்துடன் செலவினமும் குறைந்தது. சில நாட்களுக்கு முன், அறுவடை செய்யப்பட்டு, 8 டன் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் கிடைத்தது, என்றார்.

**உதவி இயக்குனர் ராமநாதன் கூறியதாவது:** திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில், கிணற்று பாசனம் மூலம் போதியளவு தண்ணீரை வைத்து, சேகர் 25 க்கு 25 செ.மீ இடைவெளியில் எல்.எல்.ஆர்.,34449 ரக நெல் நாற்றுநடவு செய்தார். ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. நெல்மணியில் பால்பிடிக்கும் பருவத்தில், விளைச்சலுக்கேற்ப குறிப்பிட்ட அளவில் காம்பளக்ஸ், யூரியா, பொட்டாஷ் உரங்கள் இடப்பட்டன.

தேவையான அளவு தண்ணீர், உரம் இட்டதால் நாற்றில் 65 சிம்புக்கு மேல் வளர்ந்தது. ஒவ்வொரு சிம்பிலும் உருவான கதிரில் 500க்கு மேல் நெல் மணிகள்

இருந்தது. அறுவடை நேரத்தில் ஆய்வு செய்யப்பட்டது. சாதாரணமாக மூன்றரை டன் கிடைக்கும்பட்சத்தில், கிணற்று பாசனத்தில் 8 டன் கூடுதல் மகசூல் கிடைத்திருப்பது வேளாண்மை அலுவலர்களின் பெருமுயற்சியில் அமோகவிளைச்சல் ஒரு மைல் கல், என்றார். இது எப்படி சாத்தியமானது என விவசாயி சேகரிடம் கேட்க 81249 22620ல் கேட்கலாம்.

**பயிர்கடனுக்கு ஒப்பந்தம் விவசாயிகள் சங்கம் மீது புகார்**

ஈரோடு: விவசாயிகளுக்கு வங்கியில் பயிர்கடன் பெற்றுத்தருவதாக கூறி விளை பொருட்கள் அனைத்தும் சங்கத்திற்கு சொந்தம் என்ற ஒப்பந்தத்தில், இந்திய மஞ்சள் உற்பத்தியாளர்கள் சங்கம் கையெழுத்து வாங்கியதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பூந்துறை பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

கடந்த மூன்று மாதங்களுக்கு முன், 12 பேர் அடங்கிய குழுக்களை அமைத்து மஞ்சள் சாகுபடிக்கு, ரூ.2 லட்சம் வரை பயிர்க்கடன் வழங்கப்படும் என்று இச்சங்கம் அறிவித்தது. விழாவில் எம்பி கணேசமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றதால் நம்பிக்கையுடன் குழுக்களை ஏற்படுத்தினோம். வங்கி கடனுக்கு சிட்டா உள்ளிட்ட ஆவணங்களை வழங்கினால் போதுமானது. ஆனால் சங்கத்தினர், 20 ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்த பத்திரத்தை வழங்கினர். அதில் ஒவ்வொரு விவசாயியும், தங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் மஞ்சள் அறுவடையான பின், சங்கத்திடம் விளை பொருட்களை ஒப்படைக்க வேண்டும் என இருந்தது. கணபதிபாளையம் கார்ப்பரேஷன் வங்கி நிர்வாகிகளை அணுகிய போது, ஆவணங்கள் இருந்தாலே போதுமானது என்று கூறினர்.

ஆனால் சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள், சங்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். விவசாயிக்கு, ரூ.2 லட்சம் வரை பயிர்க்கடன் பெற்று தரும் சங்கத்தினர், விவசாயிகளிடம் இருந்து பெறும் மஞ்சளை முறையாக வங்கிக்கு செலுத்தும் என்பதில் உத்திரவாதம் இருக்கிறதா?. இதற்கு முன் எத்தனை விவசாயிகளுக்கு கடன் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. மாவட்டத்தில் விவசாயிகள் ஏமாறும் முன், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றனர்.

இந்திய மஞ்சள் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது: தனிநபருக்கு வங்கி மஞ்சளுக்கு, ரூ.45 ஆயிரம் மட்டுமே வழங்குகிறது. ஆனால் சங்கம் மூலம், 80 ஆயிரம் ரூபாய் வரை பெற்று தருகிறோம். விவசாயிகளிடம் இருந்து ஒப்பந்தபத்திரம் வேண்டும் என்று வங்கி கேட்டதால் தான் கையெழுத்து வாங்கப்படுகிறது. சுமார் 800 விவசாயிகளுக்கு முறைப்படி, இம்மாத இறுதியில் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. ஆனால் சிலர் உள்நோக்கத்துடன் அவதூறு பரப்பி வருகின்றனர் என்றார்.

கார்ப்பரேஷன் வங்கி அதிகாரிகள் கூறியதாவது: விவசாயிகள் எந்த சங்கம் மூலமாகவும், வங்கியை அணுக வேண்டும் என்ற அவசியம் இல்லை. வி.ஏ.ஓ கையெழுத்துடன், தேவையான ஆவணங்களை அளித்தாலே பயிர்க்கடன் வழங்கப்படும் என்றனர்.

## வறட்சியால் பாதிப்பு

கோத்தகிரி : நீலகிரி மாவட்டத்தில் பனிப்பொழிவுடன் கடுமையான வெயில் அடிப்பதால், விவசாயிகள், கவலை அடைந்துள்ளனர். கோத்தகிரியில் பனியின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தேயிலை செடிகள் கருகி வருகின்றன. இதனால் நஷ்டம் ஏற்பட்டு வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரும்புக்கு கொள்முதல் விலை உயர்த்தாவிட்டால் போராட்டம்

தர்மபுரி, :தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநிலத் தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் செங்கோடன், செயலாளர்கள் சக்திவேல், குப்புசாமி, பொருளாளர் பழனி, டிராக்டர் சங்க தலைவர் மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச்செயலாளர் சுந்தரம், மாநில பொருளாளர் வேலுமணி, மாநிலத் துணைத்தலைவர் ஆறுமுகம், மாநில பிரசாரக்குழு செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாநில செயலாளர் வேலுநாய்க்கர், கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் ஸ்ரீராம்ரெட்டி, செயலாளர் சென்னையநாயுடு, பொருளாளர் ராஜரத்தினம், முன்னாள் மாவட்ட செயலாளர் சின்னசாமி, வேலூர் மாவட்ட செயலாளர் தனபால், சேலம் மாவட்ட தலைவர் பழனிமுருகன், செயலாளர் பெரியண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார். இதில் மாநிலத் தலைவர் சின்னசாமி கூறியதாவது:

தமிழக அரசு நடப்பு ஆண்டுக்கு கரும்புக்கு அறிவித்துள்ள கொள்முதல் விலை மிகுந்த ஏமாற்றம் தருவதாக உள்ளது. மத்திய அரசு அறிவித்துள்ள டன்னுக்கு ரூ400 விலை உயர்வை விட ரூ100 குறைவாக உள்ளது. கடுமையான வறட்சி, உற்பத்தி செலவு உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மறுபரிசீலனை செய்து டன்னுக்கு ரூ4 ஆயிரம் விலை அறிவிக்க வேண்டும் என தமிழக அசை கேட்டுக்கொள்கிறோம். கரும்பு கொள்முதல் வரி, செஸ்வரியை ரத்து செய்து கரும்பு விலையோடு சேர்த்து வழங்க வேண்டும்.

தேசிய வங்கிகளில் பெற்ற கடன்களுக்காக வசூல் முகவர்களை வைத்து டிராக்டர் மற்றும் உழவுகருவிகளை பறிமுதல் செய்வது, நீதிமன்றத்தில் வழக்கு

தொடுப்பது போன்றவற்றை கைவிட்டு தேசிய வங்கி விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசை கேட்டுக்கொள்கிறோம். பறிமுதல் செய்யப்பட்ட டிராக்டர் மற்றும் உழவுகருவிகளை நிபந்தனையின்றி திருப்பித்தர வேண்டும். விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும், வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், தனிநபர் காப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ10 ஆயிரம் விலை நிர்ணய செய்ய வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட தொழிலாளர்களை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை என்றால் பொங்கலுக்கு முன்பாக தமிழகம் தழுவிய போராட்டம் நடத்துவோம். இவ்வாறு சின்னசாமி கூறினார்.

**6 வாரமாக தொடர்ந்து மூடல் மணப்பாறை மாட்டுச்சந்தையை திறக்க வலியுறுத்தி கலெக்டரிடம் மனு**

மணப்பாறை, : மணப்பாறையில் தொடர்ந்து 6 வாரமாக செயல்படாமல் உள்ள மாட்டுச்சந்தையை மீண்டும் செயல்பட வைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கலெக்டரிடம் கோரி க்கை மனு விடுத்துள்ளனர்.

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் வாரந்தோறும் செயல்பட்டு வரும் மாட்டுச்சந்தை நகராட்சிக்கு சொந்தமானதாகும். இந்த மாட்டுச்சந்தை தமிழகத்தில் மிகவும் புகழ்பெற்றதாகும். இந்த சந்தை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு துவங்கி, புதன் கிழமை பிற்பகல் 2மணி வரை நடைபெறும். இந்த சந்தைக்கு தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, சேலம், தேனி, ஈரோடு, கோவை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் கேரளா போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும் மாடுகள் விற்பனைக்காகவும், வாங்கிச் செல்வதற்காகவும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெருமளவில் வந்து கூடுவர்.

வாரந்தோறும் சந்தைக்கு 3,000 முதல் 4,000 மாடுகள் வரை விற்பனைக்காக கொண்டு வரப்படும். இந்த மாட்டுச்சந்தை மூலம் மணப்பாறை மற்றும் சுற்று

வட்டார பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், இடைத்தரகர்கள், கயிறு, தீவனங்கள் விற்பவர்கள், மாட்டுக்கு கொம்பு சீவுபவர்கள், வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகளுக்கு இரவு படுக்கைக்கு கட்டில் வாடகைக்கு விடுபவர்கள் மற்றும் இதை நம்பி உள்ள சிறு ஓட்டல் மற்றும் டீ கடைக்காரர்கள், சிறு வியாபாரிகள், மாடுகளை ஏற்றி, இறக்கும் 1,000க்கும் மேற்பட்ட லாரி மற்றும் மினி ஆட்டோக்கள் என பல்வேறு வகைகளில் சுமார் 5,000 க்கும் மேற் பட்ட குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் பெற்று வருகின்றனர். இந்நிலையில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவி வரும் கோமாரி நோயால் மாடுகள் உயிரிழந்து வருகின்றன. எனவே மணப்பாறை மாட்டு சந்தையை  நடத்த மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இந்த வாரத்துடன் சேர்த்து 6வது வாரமாக மாட்டுச்சந்தை நடக்கவில்லை. மணப் பாறை மாட்டுச் சந்தையை பொறுத்தவரை இதுவரை எந்த காரணங்களுக்காகவும் தடை செய்யப்பட்டது இல்லை. தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை, தேர்தல் நாட்களின் போது கூட சந்தையை வேறொறு நாளுக்கு மாற்றி வைத்துள்ளனர். ஆனால் தற்போது தான் முதன் முறையாக தடை செய்யப்பட்டுள்ளதாக வியாபாரி கோவிந்தன்  தெரிவித்தார்.

இந்நிலையில், மணப் பாறை மாட்டுச்சந்தைக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி சந்தையை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டும் என இதுவரை மக்கள் 3 முறை திருச்சி கலெக்டரை சந்தித்து மனு கொடுத்துள்ளனர். இந்நிலையில் நேற்றும் 5வது முறையாக மணப்பாறையை சேர்ந்த கால்நடையாளர்கள் திருச்சிக்கு வந்து மாவட்ட கலெக்டரை சந்தித்து மனு கொடுத்தனர்.

மேலும் மற்ற மாவட்டங்களில் உள்ள மேலபாளை யம், வள்ளியூர், திரு வோணம், மீன்சுருட்டி ஆகிய பகுதிகளில் தடை செய்யப்பட்டிருந்த மாட்டுச் சந்தைகள் தற்பொழுது செயல்பட்டு வருவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அடுத்த மாதம் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருவிழா வரும் நிலையில், சிறு சிறு விவசாயிகள் கூட புதிதாக மாடு களை வாங்கி வீடுகளில் கட்டுவது ராசியானதாக கருதப்பட்டு வருகிறது. எனவே கோமாரி நோயை தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாட்டுச்சந்தையை

மீண்டும் நடத்த அனுமதி வழங்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தமிழ்நாடு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தொடக்கம்**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரில் தமிழ்நாடு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் உத்தரவின்பேரில், பாரூர் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தொடக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் கணேசன் தலைமை வகித்தார். பாரூர் ஊராட்சி மன்றத்தலைவர் கண்ணப்பன் நெல் கொள்முதல் நிலையத்தை தொடங்கி வைத்தார்.
நிகழ்ச்சியில் மண்டல மேலாளர் பேசுகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் விவசாயிகளிடமிருந்து, அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அப்போதே தமிழக அரசு நிர்ணயித்த விலையை பணமாக உடன் வழங்கப்படுகிறது. இதனால், விவசாயிகளுக்கு வண்டிச் செலவு, இடைத்தரகர் கமிஷன், வீண் சிரமம், காலதாமதம் இல்லாமல் உரிய தொகை ரொக்கமாக கிடைக்கின்றது. மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட, கூடுதலாக விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் அதிகமாக தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது.
சன்னரகம் குவிண்டால் ரூ1415. இதில் மத்திய அரசு விலை குவிண்டால் ரூ1345, தமிழ்நாடு அரசு மானியம் ரூ70 அதிகம் வழங்குகிறது. கிலோ ரூ14.15 நெல் சாதாரண ரகம் குவிண்டால் ரூ1360. இதில் மத்திய அரசு விலை குவிண்டால் ரூ1310. தமிழ்நாடு அரசு மானியம் ரூ50 அதிகம் வழங்குகிறது. கிலோ ரூ13.60 நெல் காய வைக்கப்பட்டு 17 சதவீத ஈரப்பதமும், சுத்தகமாகவும் இருக்க வேண்டும். இல்லையெனில் தூற்றி வாங்கப்படும். விவசாயிகள் இந்த சலுகையைப் பயன்படுத்தி தங்கள் நெல்லை அரசுக்கு விற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக துணை மண்டல மேலாளர் கண்ணம்மாள், துணை மேலாளர் (தரக்கட்டுப்பாடு) ஜவஹர்நூராணி, உதவி மேலாளர் பாஸ்கரன், விவசாய சங்க நிர்வாகிகள் மாரியப்பன், சக்கரவர்த்தி, கோவிந்தசாமி, ராம

கிருஷ்ணன், தொடக்க வேளாண்மை கடன் சங்க தலைவர் அய்யாவு, செயலாளர் சுப்பிரமணி, விஏஓ ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் முருகையன் மற்றும் நாராயணசாமி, கிருபானந்தம், பொன்னுசாமி, கணேசன், லியாகத்அலிகான் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**போச்சம்பள்ளியில் பாகற்காய் விளைச்சல் அமோகம்**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் பாகற்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து, கிலோ ரூ15 என விற்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மழை காலங்களில் மானாவரி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். வானம் பார்த்த பூமியான இப்பகுதியில் கடந்த சில மாதங்களில் பெய்த மழையை தொடர்ந்து, ஏரிகளில் தண்ணீர் வரத்து உள்ளதால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பாகற்காய் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது, பாகற்காய் அறுவடைக்கு வந்துள்ள நிலையில், அவற்றை பறித்து விற்பனை செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு விளைச்சல் குறைவு காரணமாக, ஒரு கிலோ பாகற்காய் ரூ40 விரை விற்பனையானது. தற்போது, விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை குறைந்து ஒரு கிலோ ரூ15க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதை மொத்தமாக வாங்கிச்செல்லும் வியாபாரிகள் கிலோ ரூ20 என விற்பனை செய்து வருகின்றனர்.

**காஷ்மீரில் பனிபொழிவு இல்லை**

ஸ்ரீநகர் : காஷ்மீரில் மழையோ, பனிப்பொழிவோ இல்லாமல் வானிலை சீரானது. ஜம்மு - காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் கடந்த 21ம் தேதி பனிப்பொழிவு தொடங்கியது. வழக்கமாக, இந்த சீதோஷ்ண நிலை 40 நாட்கள் நீடிப்பது வழக்கம். தொடர்ந்து 3 நாட்கள் கடும் பனிப்பொழிவு இருந்தது. புகழ் பெற்ற அமர்நாத் குகை கோயில் மற்றும் அதைச் சுற்றியுள்ள உயரமான பகுதிகளில் ஒரு அடி முதல் 4 அடி வரை பனி கட்டிகள் படிந்திருந்தன. ஆனால், நேற்று மழையோ, பனிப்பொழிவோ இல்லாமல் வானிலை சீரானது.லடாக்கில் மைனஸ் 6.3 டிகிரி செல்சியஸ், கார்கில் நகர் அருகே மைனஸ் 6.8 டிகிரி செல்சியஸ் பதிவானது. தென் காஷ்மீரில் உள்ள கொக்கர்நேக்கில் மைனஸ் 3.5 டிகிரி செல்சியஸ், வட காஷ்மீரில் உள்ள குப்வாராவில் மைனஸ் 1.1 டிகிரி செல்சியஸ் இருந்தது. இதற்கு நேர்மாறாக, ராஜஸ்தான் மாநிலம் முழுவதும் நேற்று கடும் குளிர் நிலவியது.

**அலையாத்தி காடுகளில் வெளிநாட்டு பறவைகள்**

அதிராம்பட்டினம் : அதிராம்பட்டினம் அலையாத்தி காடுகளுக்கு வெளிநாட்டு பறவைகள் வரத்து அதிகரித்துள்ளது.தஞ்சை மாவட்டம், அதிராம்பட்டினம் கடற்கரை பகுதியில்  அடர்ந்த அலையாத்தி காடுகள் அமைந்துள்ளது. இக்காடுகளுக்கு வருடந்தோறும் நவம்பர் மாதத்திலிருநது டிசம்பர் மாதம் வரை 20 க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து பலவிதமான நீர்ப்பறவைகள் வருவது வழக்கம்.வெளிநாட்டில் இருந்து வருகின்ற பறவைகள் மார்ச் மாதம் வரை தங்கி

இருக்கும். முட்டையிட்டு குஞ்சு பொரித்து பின்னர் தாய்நாடுகளுக்கு சென்றுவிடும். இப்போது பறவைகள் சீசன் துவங்கி இருப்பதால், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அமெரிக்கா, ஜப்பான், சைபீரியா, ஆஸ்திரேலியா, மலேசியா, பாகிஸ்தான், இலங்கை என 20 க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து அதிராம்பட்டினம் அலையாத்தி காடுகளுக்கு குளக்கிடா, செங்கால்நாரை, கூனி எரிச்சான், மயில்கால் கோழி, பாம்புதாரா, நத்தகொத்தி நாரை, பவளக்கால் உள்ளான், பனங்கொட்டை சிறவி, பூநாரை, கடல் காவா என 50 க்கு மேற்பட்ட வகையான நீர் பறவைகள் லட்சக்கணக்கில் அலையாத்தி காடுகளில் தங்கி உள்ளன.அதிராம்பட்டினம் துறை முகங்களை வெளிநாட்டு பறவைகள் ஆக்கிரமித்துள்ள காட்சி ரம்மியமாக உள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் அரசுக்கு ஒரு மாதம் கெடு**



சேலம்- : தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாநில அவசர செயற்குழு கூட்டம் சேலத்தில் நடந்தது. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் கூறியதாவது:தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களை அழைத்து பேசாமலும், கருத்துகளை கேட்காமலும் லிட்டருக்கு ரூ.3 கொள்முதல் விலையை உயர்த்தி உள்ளது. இந்த விலை உயர்வில் யாருக்கும் திருப்தி இல்லை. பால் உற்பத்திக்கான செலவு, வழக்கத்தை விட 60 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில் இந்த விலை உயர்வு அறிவிப்பை, எங்கள் போராட்டத்தை முடக்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள சூழ்ச்சி என்றே கருதுகிறோம்.

கொள்முதல் விலையை அரசு நிதியிலிருந்து வழங்காமல் ஆவின் மூலம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருப்பது அந்த நிறுவனத்துக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் பின்னடைவை ஏற்படுத்தும். இதேபோல் 24 ஆயிரம் கிராம கூட்டுறவு சங்க பணியாளர்களை நிரந்தரம் செய்து, ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற எங்களது நீண்டநாள் கோரிக்கை குறித்து அரசு, எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை. தமிழகத்தில் கோமாரி நோயால் 30 ஆயிரம் மாடுகள் இறந்துள்ளன. இதற்கு இழப்பீடு வழங்குவது குறித்தும் எந்த தகவலும் இல்லை. தற்போது அரசு அறிவித்துள்ள 3 ரூபாய் விலை உயர்வு போதுமானது என்ற எண்ணம் ஒரு சிலரிடம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இடுபொருள் விலை உயர்வோடு ஒப்பிடும்போது, இந்த விலை உயர்வு மிகவும் குறைவானது என்பதை விவசாயிகளுக்கு விளக்க உள்ளோம். இதற்கு மேலும் சில நாட்கள் தேவைப்படுகிறது.

எனவே, ஜனவரி 1ம்தேதி முதல் அறிவித்த பால் உற்பத்தி நிறுத்த போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்.கோரிக்கைகள் குறித்து அரசு எங்களை அழைத்து முழுமையான பேச்சுவார்த்தை நடத்தி, தற்போது ரூ.20 ஆக உள்ள பசும்பால் விலையை ரூ.30ஆகவும், ரூ.26 ஆக உள்ள எருமைப்பால் விலையை ரூ.41ஆகவும் நாங்கள் கேட்ட விலையை தர வேண்டும். இதற்காக வரும் பிப். 4ம் தேதி வரை, காத்திருப்போம். அதற்கு மேலும் எங்கள் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் கறவை மாடு களை ரோட்டில் கட்டி தமிழகம் முழுவதும் காலவரையற்ற பால் உற்பத்தி நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவோம்.இவ்வாறு செங்கோட்டுவேல் தெரிவித்தார்.

**தென் மாவட்டங்களில் நடுங்கவைக்கும் குளிர்**


நெல்லை : நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக குளிர் அதிகரித்து வரும் நிலையில் குறைந்தபட்ச வெப்ப நிலை இரவு 19 டிகிரி செல்சியசாக பதிவானது. வடகிழக்கு பருவமழை சீசன் டிசம்பர் 30ல் நிறைவுபெற உள்ள நிலையில், தமிழகத்தில் பனியின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வடகிழக்கு பருவமழை, முழுமையாக எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. ஆனால், கடந்த சில தினங்களாக இரவு மற்றும் அதிகாலையில் கடும் பனிப் பொழிவு காணப்படுகிறது. அதிகாலையில் வாகனங்கள் மற்றும் மரம், செடிகளில் பனி நீர்த்துளிகள் நிறைந்து காணப்படுகின்றன. இதுவரை இல்லாத அளவிற்கு நடுங்கவைக்கும் கடும் குளிர் நீடிப்பதால் குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு குளிர்காய்ச்சல் பரவுகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சளிக்காய்ச்சல், ஆஸ்¬துமா, சைனஸ் பாதிப்புகளால் சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
நெல்லையில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் வெயில் காணாமல் போனது. இரவு ஒரு சில இடங்களில் மிக மெல்லிய மழைத்துளி விழுந்து மறைந்தது. நேற்றும் பகல் முழுவதும் இருண்ட நிலையே நீடித்தது. வானம் இருள் சூழ்ந்து மேகமூட்டமாக இருந்தது. மேலும், தொடர்ச்சியாக குளிர்ந்த காற்று வீசியது. இதனால், இரவில் மட்டுமின்றி பகலிலும் குளிர் அதிகமாக உணரப்பட்டது. நேற்று குறைந்தபட்ச வெப்பநிலை 19 டிகிரி செல்சியசாக இருந் தது. அதிகபட்ச வெப்ப நிலை 31 டிகிரி செல்சியசாக பதிவானது.நெல்லை, குமரி, தூத்துக்குடி என தென் மாவட்டங்கள் முழுவதும் இதே வானிலை நீடித்தது. அதிகாலை மார்கழி பஜனை பாடியபடி கோயிலுக்கு சென்றவர்களும், நடைபயிற்சி சென்றவர்களும் கடும் குளிரை தாங்க முடியாமல் தவித்தனர்.

**மாநிலங்களில் இருந்து வெளி கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தினமும் 300 டன் உருளை வரத்து**



**சென்னை:** வெளிமாநிலங்களில் இருந்து உருளைக் கிழங்கு அதிக அளவில் வருவதால், உருளை கிலோ ஸி20க்கு விற்கப்படுகிறது. தற்போது வெளிமாநிலங்களில் இருந்து அதிக அளவில் உருளைக் கிழங்கு சென்னைக்கு வருகிறது. அதன் விலையும் ஒரு கிலோ ரூ.20 என்ற நிலையிலேயே உள்ளது.

இதுகுறித்து, சென்னை கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் நேற்று கூறுகையில், 'கர்நாடகத்திலுள்ள வி.கோட்டா, முல்பாகல், கோலார், சிந்தாமணி, மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூர், உ.பி.யிலுள்ள ஆக்ரா ஆகிய இடங்களில் இருந்து தினமும் சுமார் 30 லாரிகளில் 300 டன் வரை உருளைக் கிழங்கு வருகிறது. இதனால், ஒரு கிலோ ஸி20க்கு விற்பனை செய்கிறோம்.

டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை சீசன் என்பதால் இந்த விலையில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது' என்றனர்.

**ஊட்டியில் 3 நாட்கள் தேயிலை விழா**



ஊட்டி: நாளை துவங்கி மூன்று நாள் நடக்கும் தேயிலை மற்றும் சுற்றுலா விழாவை தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர்

சண்முகநாதன் துவக்கி வைக்கிறார்.
நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பிரதான தொழிலாக உள்ளது. தேயிலை தொழிலை மேம்படுத்தவும், சுற்றுலா பயணிகளிடையே தேயிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆண்டு தோறும் ஊட்டியில் தேயிலை மற்றும் சுற்றுலா விழா நடத்தப்படுகிறது. இந்த முறை 27ம் தேதி நாளை துவங்கி மூன்று நாள் நடக்கும் இவ்விழா மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்ட திறந்தவெளி அரங்கில் விழா நடக்கிறது.

**இஞ்சி வரத்து குறைவால் கிலோ ரூ.70க்கு விற்பனை**



சேலம்: இஞ்சி விலை கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கிலோவிற்கு ரூ.10 வரை உயர்ந்துள்ளது.
சேலம் மார்க்கெட்டிற்கு கர்நாடக மாநிலம் குடகு, கேரளா, சேலம் மாவட்டம் ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் இருந்து இஞ்சி விற்பனைக்கு வருகிறது.
இஞ்சியை பொறுத்த வரையில் பழைய இஞ்சிக்கே வரவேற்பு அதிகமாக இருக்கும். தற்போது இஞ்சி வரத்து குறைந்துள்ளதால் இஞ்சி விலை கிலோவிற்கு ரூ.10 வரை அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் ரூ.3,100க்கு விற்பனை செய்யப்பட்ட 60 கிலோ கொண்ட மூட்டை தற்போது ரூ.500 அதிகரித்து ரூ.3,600 வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது மொத்த விலையில், மண்ணின் எடை, சாக்கு, சேதாரம் போக ஒரு கிலோ இஞ்சி ரூ.60க்கும், சில்லறை விற்பனையில் ஒரு கிலோ இஞ்சி ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மா மரங்களில் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி?**



மா மரங்களை பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பது குறித்து இங்கு காண்போம்.

<u>'மா' மரங்கள்</u>

மாம்பழம் சுவை மட்டுமல்லாமல் பல்வேறு சத்துக்களையும் கொண்டது. மாம்பழத்தில் "ஏ", "சி", மற்றும் "இ" வைட்டமின்கள் அதிகமாக காணப்படுகிறது. "மா" பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது உள்ள தட்பவெப்ப நிலைக்கு ஏற்றது போல் அவற்றை முறையாக பராமரித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தினால் கூடுதல் லாபம் பெற முடியும்.

மாம்பழத்தில் நீலம், பெங்களூரா (தோத்தாப்புரி), அல்போன்சா, ருமானி, பங்கனப்பள்ளி, காலாப்பாடி, பீத்தர், செந்தூரா, ஜஹாங்கீர், மல்கோவா,

இமாயுதீன், அர்கா அன்மால், அர்கா அருணா, அர்கா நீல்கிரன், அர்கா புனீத், அமரப்பள்ளி, பி.கே.எம். 1, பி.கே.எம் 2, பையூர்1, மல்லிகா, சிந்து, ரத்னா ஆகிய ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

இவற்றில் மல்லிகா, சிந்து, ரத்னா, பி.கே.எம் 2 போன்ற ரகங்கள் உயர் ரகங்களாகவும், கேசர் மற்றும் அமரப்புள்ளி போன்ற ரகங்கள் சுவை மற்றும் அதிக விளைச்சல் தரும் ரகங்களாகவும் உள்ளன. மல்லிகா மற்றும் சிந்து ரகங்கள் விதையில்லாதது.

<u>பிஞ்சுகள்</u>

மாமரம் இதுவரை பூக்காமல் இருந்தால், 0.5 சதவீத யூரியா கரைசல் (5 கிராம் யூரியா ஒரு விட்டர் நீருக்கு) அல்லது ஒரு சதவீத பொட்டாசியம் நைட்ரேட் கரைசல் (10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் ஒரு லிட்டர் நீருக்கு) என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உருவாக வாய்ப்பு உண்டு.

பூக்கள் பூத்திருக்கும் மாமரங்களில் நாப்தலின் அசிட்டிக் அமிலம் தெளிப்பதால் அதிக பிஞ்சுகள் உருவாவதோடு, பிஞ்சுகள் உதிர்வதும் தடுக்கப்படும். அதே நேரத்தில் பிஞ்சுகள் உருவாகி உள்ள மாமரங்களில் 2 சதவீத பொட்டாசியம் நைட்ரேட் தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு பழங்கள் உற்பத்தி அதிகரிக்கும். மாமர தோப்புகளில் தோழமை தாவரங்களான சீத்தாப்பழ கன்றுகள் மற்றும் ஆமணக்குச் செடிகளை பயிரிடுவதால் கூடுதல் வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன.

<u>பூச்சிகளும், கட்டுப்படுத்தும் வழிகளும்…</u>

மாமரங்களை மூன்று விதமான தத்துப்பூச்சிகள் தாக்குகின்றன. மாமரத்தின் கிளைகளில் தத்துப்பூச்சியில் தாக்குதலை எளிதாக கண்டறிய முடியும். தத்துப்பூச்சியின் தாக்குதலினால் பூக்களின் எண்ணிக்கை குறைவதோடு பூக்களிலும் அதன் பாதிப்பு ஏற்படும். தத்துப் பூச்சியின் தாக்குதல் குறைவாக இருப்பின் 3 சதவீத வேப்ப எண்ணை ஒரு லிட்டர் நீருக்கு 5 மி.லி அல்லது வேப்பம் சோப்பு ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

<u>தத்துப்பூச்சியின் தாக்குதல் மத்திமமாக</u>

இருப்பின், ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் “பெவேரியா பேஸியானா“ என்ற உயர்ரக பூஞ்சாண மருந்தினை அதிக திறன் உள்ள தெளிப்பான் மூலம் தெளிப்பு வேகத்தை குறைத்து மாமரம் மற்றும் பூக்களின் மீது தெளிப்பதால் தத்துப்பூச்சிகள் அழியும். தாக்குதல் அதிகமாக இருப்பின், “அசிபேட் 75 எஸ்.பி“ ஒரு கிராம் ஒரு லிட்டர்

நீருக்கு அல்லது "கார்பரைல் 50 டபிள்யு.பி" ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் பூ உருவாகும் சமயத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து 2–வது முறையும் பூக்களின் மீது தெளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் நனையும் கந்தகம் 2 கிராம் ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளித்தால் செஞ்சிலந்தியின் தாக்குதலை தடுக்க முடியும்.

பிணைக்கும் புழுகள் எச்சத்தால், மாமரங்களின் பூக்களில் கூடுகள் கட்டி வலைபோல் பின்னி பூக்களை உண்பதால் மகசூல் பாதிக்கப்படுகின்றது. இதனால் பூக்களில் மகரந்த சேர்க்கை நடைபெறுவதும் தடுக்கப்படும். பிணைக்கும் புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த "பேசலோன் 35 இ.சி" 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு அல்லது "புரப்னோபாஸ்" 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் பூக்களின் மீது தெளிக்க வேண்டும்.

**இலை கொப்புளம்**

இலை கொப்புளம் மற்றும் அசுவிணியை கட்டுப்படுத்த "டைமித்தோயேட்" 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

மாமர தோப்புகளில் கரையான் புற்றுகளை அழிக்க சோற்றுக்கற்றாழை செடிகளை நடலாம். மேலும் மாமரங்களில் தோன்றும் கரையானை அழக்க சிறிதளவு சர்க்கரைக் கரைசலை மரத்தின் மீது தெளிப்பதால் செவ்வெறும்புகள் சர்க்கரையை தேடிவந்து கரையான்களை அழிக்கும்.

மாமரத்தில் பழங்களில் தோன்றக்கூடிய பழ ஈயை கட்டுப்படுத்த பிரத்தியேக இனக்கவர்ச்சி பொறியை ஒரு ஏக்கருக்கு 2 என்ற அளவில் பூக்கும் தருணத்தில் வைத்துவிட வேண்டும். இதனால் பழ ஈக்கள் பூ பூக்கும் தருணத்தில் முட்டையிடுவது தவிர்க்கப்பட்டு இனக்கவர்ச்சிப் பொறியால் அவை ஈர்க்கப்பட்டு அழிக்கப்படும்.

தகவல்:– விஜயகுமார், பூச்சியியல் துறை வல்லுனர், காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம்.

<u>மஞ்சளாறு அணை நாளை திறப்பு ஜெயலலிதா அறிவிப்பு</u>



சென்னை,

முதல்&அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டு கோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடி பாசனத்திற்காக 27.12.2013 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள சுமார் 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
இவ்வாறு முதல்-அமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் ‘வேளாண் எந்திரக்குழு’ அமைக்க விண்ணப்பிக்க வேண்டுகோள்

அரியலூர்,

அரியலூர் மாவட்டத்தில் வேளாண் எந்திரக்குழு அமைக்க விண்ணப்பிக்க வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

<u>வேளாண் எந்திரக்குழு</u>

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கிராமப்புற இளைஞர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் 15-16 நபர் களை கொண்ட "வேளாண் எந்திரக்குழு" அமைக்கப் படவுள்ளது. இக்குழுவானது 4 உப குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு உபகுழுவுக்கும் ஒரு பவர் டில்லர், ஒரு நாற்று நடும் எந்திரம், ஒரு மானாவாரி பயிர் களை எடுக்கும் கருவி, ஒரு நெல் களை எடுக்கும் கருவி, ஒரு உழவில்லா விதைப் புக்கருவி ஆகிய 5 எந்திரங்கள் முழு மானியத்தில் வழங்கப் படும்.

<u>பயிற்சி</u>

இவ்வெந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும், குழு உறுப்பினர்களுக்கு 10 நாட்கள் பயிற்சி இத்துறை மூலம் வழங்கப்படும். இக்குழு "சங்கங்களின் பதிவு சட்டப் படி" பதிவு செய்யப் படும். மேற்கண்ட எந்திரங்களை தொடர்புடைய விவசாய வேலைகளுக்கு பயன்படுத்தி அதன் மூலம் பெறப்படும் வாடகைத் தொகையை கொண்டு குழு வின் உறுப் பினர்கள் வரு மானம் பெற லாம். இக்குழுவின் பெயரில் வரவு செலவினங் களை நிர் வாகம் செய்ய தேசிய மயமாக் கப்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கப்படும்.

<u>எரிபொருள் செலவினம்</u>

எந்திரங்களை குழுவின் உறுப்பினர்களே இயக்க வேண்டும். அதன் மூலம் பெறப்படும் வாடகை வருவாய் அனைத்தும் இக்கணக்கில் செலுத்தப்படும். வாடகை வருவாயிலிருந்து எந்திரங்கள் பராமரிப்பு, எரிபொருள் போன்ற செலவினங்கள் மேற்கொள்ளப் படும்.

எஞ்சிய வருவாய் உறுப்பி னர்களின் சம்பளம், சங்கத்தின் செயல் நடவடிக்கைகளுக்கு பயன் படுத்திக்கொள்ளலாம். இது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறையுடன் இக்குழுவானது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனை களுடன் அமைக்கப்படும் இக்குழுவின் உறுப்பினர்கள் 40 வயதுக்குட்பட்டு, குறைந்த பட்சம் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, விவசாய பணியை மட்டுமே முழு நேரப்பணியாக கொண்ட ஊரக இளைஞர்கள் குறு/சிறு விவசாயிகளாக இருக்க வேண்டும்.

<u>நேர் காணல்</u>

செந்துறை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், அரியலூர் வட்டாரத்தை சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க கோரப்படுகிறது. குழு உறுப்பினர்கள் நேர் காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். குழுவில் உறுப்பினர்களாகி பணி செய்ய விருப்பம் உள்ளவர்கள் வட்டாட்சியரி டமிருந்து பெறப்பட்ட சிறு/குறு விவசாயி அல்லது முழு நேர விவசாய தொழிலாளி சான்றுடன், 30.12.2013-ம் தேதிக்குள் உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) ஜோதி புரம், சிதம்பரம்சாலை, ஜெயங் கொண்டம் என்ற அலுவலகத் தில் விண்ணப் பிக்கலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

<u>பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.31 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை</u>



பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெறும். வரத்து அதிகமாக இருந்தால் புதன்கிழமை சிறப்பு ஏலம் நடைபெறும். நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு விவசாயிகள் 946 மூட்டைகளில் 50 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காயை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 70 ரூபாய் 75 காசு முதல் 74 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் 36 ரூபாய் 85 காசு முதல் 69 ரூபாய் 5 காசு வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.31 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

<u>பழைய அமராவதி பாசனத்தில் நெல் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் தேவை விவசாயிகள் கோரிக்கை</u>




திருப்பூர்,

பழைய அமராவதி பாசனத்தில் 4,500 ஏக்கர் பரப்பில் சாகு படி செய்யப்பட்ட நெல் பயிருக்கு கூடுதலாக தண்ணீர் வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

திருப்பூர் மாவட்ட கலெக் டர் அலுவலக வளாகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று காலை நடந்தது. கூட்டத்துக்கு ஜி.கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் முகமது கலிபுல்லா செரீப் முன்னிலை வகித்தார்.

கடந்த மாதம் 27–ந் தேதி நடந்த விவசாயிகள் குறைதீர்க் கும் நாள் கூட்டத்தில் விவ சாயிகள் கூறிய குறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை கள் குறித்து விவாதிக்கப்பட் டது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசிய போது கூறிய தாவது:–

<u>தண்ணீர் திறப்பு</u>

ஈஸ்வரமூர்த்தி:– பழைய அமராவதி வாய்க்கால் பாச னத்தில் தாராபுரம், கொளிஞ்சிவாடி, அலங்கியம், தளவாய் பட்டிணம் ஆகிய பகுதிகளில் 4,500 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது பழைய

அமராவதியில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த சாகுபடியை நிறைவு செய்ய இன்னும் 7 நாட்கள் தண்ணீர் தேவைப்படுகிறது.

எனவே 10 நாட்கள் கழித்து மீண்டும் அமராவதியில் இருந்து 7 நாட்கள் தண்ணீர் திறந்து விட வேண்டும். பயிர் கடன் வழங்கும் போது பயிர்க் காப்பீட்டுக்காக 20 சதவீதம் தொகை பிடித்தம் செய்யப்பட் டது. ஆனால் ஒரு விவசாயி யின் தோட்டத்தில் மட்டும் பயிர் பாதிக்கப்பட்டால் அந்த தொகை கிடையாது என்று கூறுகிறார்கள். கோமாரி நோய் பரவியதால் தடை செய்யப்பட்ட மாட்டு சந்தையை மீண்டும் நடத்த அனுமதி வழங்க வேண்டும்.

<u>பாலில் கலப்படம்</u>

கோபால்:– தனியார் நிறு வனங்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பாலில் கலப்படம் செய்து விற்பனை செய்து வருகிறார்கள். இது பற்றி ஆய்வு நடத்த வேண் டும்.

மலரவன்:– உடுமலை ஆண் டிக்கவுண்டனூர் பகுதி யில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான 35 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. இதை அகற்ற வேண்டும்.

என்.எஸ்.பழனிசாமி:– புதிய மின் இணைப்பு கேட்டு பணம் செலுத்தியவர்களுக்கு மின்இணைப்பு கொடுக்க உத்தரவு பிறப்பித்தும், மின் வாரிய அதிகாரிகள் இணைப்பு வழங்க காலம் தாழ்த்திவருகிறார்கள்.

<u>உழவர் சந்தை</u>

விவசாயிகள் தங்கள் நிலங் களில் இருந்து டிராக்டர்களில் மண் எடுத்து, தங்களின் மற் றொரு நிலத்தில் கொட்டு வதற்கு வருவாய்த்துறை அதி காரிகள் தடைவிதிக்கிறார்கள். உடுமலை உழவர் சந்தையில் வியாபாரிகள் கடைவிரித்து நுகர்வேரை தடுக்கிறார்கள்.

இவ்வாறு விவசாயிகள் கூறினார்கள்.

இதற்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பதில் அளித்து பேசும் போது கூறிய தாவது:–

<u>உயிர் உரங்கள்</u>

தட்டுவெட்டும் கருவியின் தரத்தை பரிசோதித்து வாங்கி கொடுக்க வேண்டும். உயிர் உரங்களை விவசாயிகள் வாங்குவதில்லை. அவை தேக்கம் அடைந்து கிடக்கிறது. போலி உரங்களை விற்பனை செய்வதை நாங்கள் ஒரு புறம் தடுத்து வருகிறோம்.

இருப்பினும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட நபர் பற்றி தகவல் கொடுத்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உரம் வாங்கும் போது கட்டாயம் ‘பில்’ வாங்க வேண்டும். திருப்பூர் மாவட் டத்தில் 56 மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டது. இதில் 9 மாடுகள் இறந்துள்ளன. அரசாணை வந்ததும் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

<u>மாட்டு சந்தை</u>

தற்போது அமராவதியில் இருந்து 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஆனால் 96 கன அடிதான் தண்ணீர் வரத்து உள்ளது. முடிந்த அளவு தண்ணீர் திறந்து விட முயற்சி செய் யப்படும். மாட்டு சந்தை இன்னும் 10 நாட்களில் திறந்து விடப்படும்.

ஒரு விவசாயி தனது நிலத் தில் இருந்து தன்னுடைய மற் றொரு நிலத்துக்கு விவசாய பயன்பாட்டுக்காக மண் எடுத்து செல்லும் போது கிராமநிர்வாக அதிகாரியிடம் மட்டும் கட்டாயம் அனுமதி பெறவேண்டும்.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

<u>ரூ.5¾ லட்சம் மானியம்</u>

முன்னதாக வேளாண் பொறியியல் துறையின் மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 19 பேருக்கு ரூ.5¾ லட்சம் மானியத்தில் ரூ.13 லட்சம் மதிப்பில் வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகளை கலெக்டர் கோவிந்தராஜ் வழங்கினார்.

உழவர் சந்தைகளில் வரத்து அதிகரிப்பால் தக்காளி, அவரைக்காய், கேரட் விலையில் வீழ்ச்சி



சேலம் உழவர் சந்தைகளில் தக்காளி, அவரைக்காய், கேரட் வரத்து அதிகரித்து உள்ளதால் அதன் விலை குறைந்து உள்ளது.

வரத்து அதிகரிப்பு

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. சந்தைக்கு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். சேலம் மாநகரில் அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி, அம்மாப்பேட்டை, சூரமங்கலம் ஆகிய 4 இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன.

உழவர் சந்தைகளில் தற்போது தக்காளி, அவரைக்காய், கேரட் வரத்து அதிகமாக உள்ளது. மேலும் முகூர்த்த நாள் இல்லாததாலும் அதன் விலை குறைந்து உள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.50 வரை விற்ற கொம்பு அவரைக்காய் இந்த வாரம் ரூ.30–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், கடந்த வாரம் ரூ.40–க்கு விற்பனை செய்த யானைக்கால் அவரை ரூ.32–க்கும் விற்கப்படுகிறது.

கிலோ ரூ.10–க்கு விற்பனை

கடந்த வாரம் கிலோ ரூ.18–க்கு விற்ற தக்காளி இந்த வாரம் கிலோ ரூ.10–க்கு விற்கப்படுகிறது. மேச்சேரி, ஓமலூர் போன்ற பகுதிகளில் இருந்து தக்காளி

அதிகளவு உழவர் சந்தைகளுக்கு வருவதால் இந்த விலை குறைவு ஏற்பட்டுள்ளது. முட்டைக்கோஸ் கிலோ ரூ.14–க்கும், கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்றவை கிலோ ரூ.18–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

உருளை கிழங்கு கிலோ ரூ.32–க்கும், உழவர் சந்தைக்கு புதுவரத்து அதிகரித்தது காரணமாக கடந்த வாரம் கிலோ ரூ.64–க்கு விற்ற சின்ன வெங்காயம் இந்த வாரம் ரூ.34–க்கும் விற்கப்படுகிறது. பெரிய வெங்காயம் கிலோ ரூ.24–க்கும், பச்சை மொச்சை கிலோ ரூ.30–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

உழவர் சந்தைகளுக்கு காய்கறிகளின் வரத்து அதிகரித்து உள்ளதால் விலை இன்னும் சற்று குறைய வாய்ப்புள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

<u>கோழிப்பண்ணையாளர்கள் தீவன அளவை கட்டுப்படுத்தி முட்டை உடைவை தவிர்க்கலாம் ஆராய்ச்சி நிலையம் தகவல்</u>

நாமக்கல்,

கோழிப்பண்ணையாளர் கள் தீவன அளவை கட்டுப்படுத்துவதால் முட்டையின் உடைவை தவிர்க்கலாம் என்று நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

<u>ஆராய்ச்சி நிலையம்</u>

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும் (வியாழக்கிழமை), நாளையும் (வெள்ளிக்கிழமை) அடுத்த 2 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

இன்றும், நாளையும் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் அடுத்த 2 நாட்களுக்கு முறையே 3, 3 கி.மீ. வேகத்தில் இருக்கும். தென் கிழக்கு திசையில் இருந்து வீசும்.

வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 86 டிகிரியாகவும், குறைந்தபட் சமாக 64.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம்

அதிகபட்சமாக முறையே 70, 71 சதவீதமாகவும், குறைந்தபட் சமாக முறையே 42, 44 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

இன்றும், நாளையும் நாமக்கல் மாவட்ட வானி லையில் வானம் லேசான மேகமூட்டத்துடன் மழை யற்று காணப்படும். அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்ப நிலை அளவுகள் முறையே 86 டிகிரி மற்றும் 64.4 டிகிரியாக நிலவும். காற்றின் வேகம் பெரும்பாலும் 3 - 4 கிலோ மீட்டர் என்ற அளவில் பெரும்பாலும் தென் கிழக்கில் இருந்து வீசும். ஈரப்பதம் 42 - 71 சதவீதமாக நிலவும்.

அடுத்த 2 நாட்களுக்கான வானிலையில் இரவு வெப்பம் 64.4 டிகிரிக்கும் குறைவாகவே நிலவும் என்பதால் கோழிகளுக்கான தீவனத்தில் அதிகபட்ச எரிசக்தியும் (2600 கிலோ கலோரி வரையில்) அதற்கேற்றார்போல் புரதத் தின் அளவை குறைத்தும் தரலாம். தீவன அளவை கட்டுப்படுத்துவதால் முட்டை யின் உடைவை தவிர்த்து, அதனால் அதிக முட்டை உடைவையும் தவிர்க்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

நாமகிரிப்பேட்டையில் 1,817 மூட்டை மஞ்சள் ரூ.60 லட்சத்திற்கு ஏலம்



ராசிபுரம்,

நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளையில் நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 1,817 மூட்டைகள் ரூ.60 லட்சத்திற்கு ஏலம் போனது.

<u>மஞ்சள்</u>

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் நாமகிரிபேட்டையில் நேற்று மஞ்சள் ஏலம் நடைபெற்றது. இதில் ஆத்தூர், முள்ளுக்குறிச்சி நாமகிரிப் பேட்டை, நாமக்கல், எருமப் பட்டி, பவுத்திரம், துறையூர், புதுப்பட்டி, பேளுக்குறிச்சி, வெள்ளக்கல்பட்டி, உள்பட பல இடங்களில் இருந்து விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல ஈரோடு, சேலம், ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி போன்ற இடங்களில் இருந்து வியா பாரிகள் மஞ்சளை ஏலம் எடுக்க வந்திருந்தனர்.

<u>ரூ.60 லட்சத்திற்கு ஏலம் போனது</u>

இந்த ஏலத்திற்கு விரலி ரகம் 1,336 மூட்டைகளும், உருண்ட ரகம் 435 மூட்டைகளும், பனங்காளி ரகம் 46 மூட்டை களும் என மொத்தம் 1,817 மூட்டைகளும் வந்திருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.4,829-க்கும், அதிகபட்சமாக ரூ.7,777-க்கும், உருண்ட ரகம் குறைந்தபட்சம் ரூ.4,389-க்கும், அதிகபட்சமாக ரூ.5,921-க்கும், பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ரூ.9,399-க்கும், அதிகபட்சமாக ரூ.12,609-க்கும் ஏலம் போனது. மொத்தம் 1,817 மூட்டை மஞ்சள் ரூ.60 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் குறைந்து வரும் வேளாண்மை சாகுபடி பரப்பு



சாகுபடி பரப்பளவு (ஹெக்டேரில்)

| ஆண்டு | நெல் | சோளம் | கம்பு | கேழ்வரகு |
|---|---|---|---|---|
| 2001 - 02 | 20,60,000 | 3,17,000 | 1,25,000 | 1,25,000 |
| 2002 - 03 | 15,16,000 | 3,20,000 | 1,02,000 | 1,04,000 |
| 2003 - 04 | 13,97,000 | 4,02,000 | 1,59,000 | 1,18,000 |
| 2004 - 05 | 18,73,000 | 3,77,000 | 98,000 | 1,09,000 |
| 2005 - 06 | 20,50,000 | 3,16,000 | 82,000 | 1,00,000 |
| 2006 - 07 | 19,31,000 | 2,94,000 | 66,000 | 95,000 |
| 2007 - 08 | 17,89,000 | 2,84,000 | 60,000 | 94,000 |
| 2008 - 09 | 19,32,000 | 2,59,000 | 57,000 | 90,000 |
| 2009 - 10 | 18,46,000 | 2,38,000 | 54,000 | 82,000 |
| 2010 - 11 | 19,06,000 | 2,43,000 | 49,000 | 76,000 |
| 2011 - 12 | 19,04,000 | 1,98,000 | 47,000 | 83,000 |

தமிழ்நாட்டில் முக்கியமான பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பளவு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட கணிசமாகக் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டின் முக்கியப் பயிரான நெல் கடந்த 2001-02-ம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 20 லட்சத்து 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. அதுவே அடுத்த பத்தாண்டுகளில் அதாவது 2011-12-ல் 19 லட்சத்து 4 ஆயிரம் ஹெக்டேராகக் குறைந்துவிட்டது.

அதேபோல் 2001-02-ம் ஆண்டில் 3 லட்சத்து 17 ஆயிரம் ஹெக்டேராக இருந்த சோளம் சாகுபடி பரப்பு 2011-12-ம் ஆண்டில் 1 லட்சத்து 98 ஆயிரம் ஹெக்டேராகவும், 1 லட்சத்து 25 ஆயிரம் ஹெக்டேராக இருந்த கம்பு சாகுபடி பரப்பு, வெறும் 47 ஆயிரம் ஹெக்டேராகவும், 1 லட்சத்து 25 ஆயிரம் ஹெக்டேராக

இருந்த கேழ்வரகு சாகுபடி பரப்பு, 83 ஆயிரம் ஹெக்டேராகவும் குறைந்துவிட்டன. நிலக்கடலை சாகுபடி பரப்பு 6 லட்சத்து 63 ஆயிரம் ஹெக்டேரிலிருந்து 3 லட்சத்து 86 ஆயிரம் ஹெக்டேராகவும், எள் சாகுபடி பரப்பு 84 ஆயிரம் ஹெக்டேரிலிருந்து 43 ஆயிரம் ஹெக்டேராகவும் குறைந்துள்ளன.

இது தவிர சிறு தானியங்கள் பயிரிடப்படும் மொத்த சாகுபடி பரப்பு இந்த பத்தாண்டுகளில் 27 லட்சத்து 66 ஆயிரம் ஹெக்டேர் என்ற அளவிலிருந்து 25 லட்சத்து 42 ஆயிரம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இந்த விவரங்கள் அனைத்தும் தமிழக அரசின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை வெளியீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளன.

மாநிலத்தின் முக்கிய உணவுப் பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பளவு கடந்த 10 ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்துள்ளது என்பது எதிர்கால உணவுப் பாதுகாப்பு குறித்த பெரும் கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது. இது குறித்து காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் சங் கத்தின் பொதுச் செயலாளர் மன்னார் குடி எஸ்.ரங்கநாதன் கூறியதாவது: நகரப் பகுதிகளின் விரிவாக்கம் என்பது வேளாண்மை சாகுபடி பரப்பளவு குறைய மிக முக்கிய காரணமாக உள்ளது. இது தவிர நிலத்தடி நீர்மட்டம் குறைவது, நிலத்தடி நீரில் உப்புத் தன்மை அதிகரிப்பது போன்றவையும் முக்கியக் காரணங்கள்.

இந்த சூழலில் காவிரி டெல்டா மாவட்டங்களில் உத்தேசிக்கப் பட்டுள்ள மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டால் மேலும் பல லட்சம் ஏக்கர் நிலம் சாகு படியை இழக்க நேரிடும். ஆகவே, இதுபோன்ற தொழில் திட்டங்களை விவசாய சாகுபடிப் பகுதிகளில் அமல்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மேலும், நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கான கடமையைச் செய்ய வேண்டும் என்றார். பொருளாதார வல்லுநர் வெங்க டேஷ் ஆத்ரேயா தனது கருத்தை கூறும்போது, ‘வேளாண்மைத் துறைக்கான மத்திய, மாநில அரசு களின் நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்படுவது மிகவும் முக்கியம் என்றார்.

மேலை நாடுகள் எல்லாம் வேளாண்மைத் துறைக்கு அதிக மானியம் வழங்கி வரும் நிலை யில், நமது நாட்டில் ஏற்கெனவே வழங்கி வரும் மானியத்தையும் குறைக்கும் நிலை உள்ளது. நீர் பாசனப் பரப்பளவை அதிகரிப்பதற் கான புதிய திட்டங்கள் செயல் படுத்தப்பட வேண்டும். விவசாய விளைபொருள்களுக்கு நியாய மான விலை கிடைப்பதோடு, அறு வடை ஆனவுடன் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும்.

அறிவியல் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு பயிற்சி கள் அளிக்கப்பட வேண்டும். மண் பரிசோதனை, உரமிடும் முறை உள்ளிட்டவை குறித்து வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்கள் களத்தில் இறங்கி விவசாயிகளுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

குறிப்பாக விவசாயிகளுக்கு அதிக மகசூல், விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான நட வடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்வதன் மூலம் வேளாண்மைத் துறையைப் பாது காக்க முடியும்' என்றார் ஆத்ரேயா.

## பூச்சியுண்ணும் அபூர்வ தாவரம்



பூச்சி, விலங்குகளை உண்ணும் தாவரம் பற்றி அச்சுறுத்தும் வகையில் ஹாலிவுட் படங்களில் சில காட்சிகளை நீங்களும் பார்த்திருக்கலாம். ஆனால், அது போன்று பூச்சியுண்ணும் ஒரு அபூர்வத் தாவரம் ஏற்காடு மலையில் 38 ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வருவது பலருக்கும் தெரியாது.

இந்தியாவில் பூச்சி உண்ணும் 19 வகை செடிகள் உள்ளன. மேகாலயா மாநிலத்தின் காசி மலையில் நெப்பந்தசேயி எனும் பூச்சி உண்ணும் தாவரம் காணப்படுகிறது. காசி மலையில் அதிகம் காணப்படுவதால், நெப்பந்த சேயி காசியானா என்பது தாவரவியல் பெயர். இது கடல் மட்டத்தில் இருந்து 1,000 அடி முதல் 10,000 அடி உயரம் வரையுள்ள பகுதிகளில் வளரக்கூடியது. ஈரம்மிக்க காடுகள், சதுப்பு நிலங்கள், குட்டை ஓரங்களில் நெப்பந்தசேயி 100 ஆண்டுகள் வரை வாழ்கிறது.

ஒரு அடி உயரம் முதல் 70 அடி உயரம் வரை கொடியாக மரங்களில் தொற்றி, காற்றில் சுற்றித் திரியும் மின்மினி பூச்சி முதல் குழவிகள் வரையிலான பூச்சிகளை பூஜாடி போன்ற தனது பூக்களில் சிக்க வைத்து, இது சாப்பிடுகிறது. வண்டு, நத்தை, குழவி என பூச்சிகளை மட்டுமில்லாமல், குட்டி எலியைக்கூட இந்த வகை தாவரங்கள் சாப்பிடுமாம்.

இவை அசைவத்தை விரும்பிச் சாப்பிடுவதற்குக் காரணம், உயிர் வாழ்வதற்குத் தேவையான புரதச் சத்துகள், அது வளரும் மண்ணில் குறைவாக இருப்பதுதான்.

பூக்களின் உயரம் 10 செ.மீ. முதல் 30 செ.மீ. உயரம் வரை. பூவின் கழுத்து பகுதியில் மூடி போன்ற இலை, குடுவையை மூடியிருக்கும். பூக்குடுவையில் மூன்றில் ஒரு பங்கு பெப்சின் என்ற திரவமும், கழுத்து விளிம்பில் நெக்டார் என்ற சுவையான தேனும் இருக்கும்.

தேன் வாசமும், பூவின் நிறமும் பட்டாம் பூச்சிகள், வண்டினங்களை கவர்ந்து இழுக்கும். ஆபத்தை உணராத பூச்சியினங்கள், பூவின் விளிம்பில் அமர்ந்து தேனை குடிக்கும் நொடியில், சரசரவென வழுக்கிக்கொண்டு பூவுக்குள் பெப்சின் திரவத்தில் விழும்.

ஜாடிக்குள்ளிருந்து பூச்சிகள் வெளியே வந்துவிடக்கூடாது என்பதற்காக, மெல்லிய இழை போன்ற சிறுமுடிகள் உட்புறம் சிலிர்த்தெழுந்து நிற்கும். இந்த முடிகள், பூச்சிகள் மேலே எழுந்து வராமல் தடுக்கும். பெப்சின் திரவம் பூச்சியை

ஜீரணிக்கக்கூடிய சக்தியைக் கொண்டிருப்பதால், மேலே எழுந்து வருவதற்கான பூச்சிகளின் முயற்சி தோல்வியில் முடியும். கொஞ்சம் கொஞ்சமாய் திரவத்தில் கரைந்து போகும்.

அடைமழை பெய்தாலும் ஒரு சொட்டு நீர்கூட ஜாடிக்குள் விழுந்து பெப்சின் திரவம் நீர்த்து போகாமல் இருக்க, ஜாடி விளிம்பில் உள்ள இலை, மூடி போலச் செயல்படும்.

பூச்சியுண்ணும் தாவரங்கள் வட இந்தி யாவில் மட்டுமே இயற்கையாக இருந்து வருகின்றன. கடந்த 1975ஆம் ஆண்டு, மேகாலயா மாநிலத்தில் இருந்து ஏற்காடு தாவர வியல் பூங்காவுக்கு 15 நெப்பந்தசேயி செடிகள் கொண்டு வரப்பட்டன. அதில் ஒரு செடி 38 ஆண்டுகளாக இப்போதும் இருக்கிறது.

ஏற்காடு தாவரவியல் பூங்காவைச் சேர்ந்த ஏற்காடு இளங்கோ இது பற்றி கூறுகையில், "நாங்கள் பாதுகாத்து வரும் நெப்பந்தசேயி செடி, பெண் தாவரம் என்ற விவரம் ஐஞ்சு வருஷத்துக்கு முன்னாடிதான் தெரிஞ்சது. அப்பத்தான் இது முதல்முதலா பூத்தது. பக்கத்துல ஆண் நெப்பந்தசேயி செடி இருந்தால் மட்டுமே இதில் மகரந்தச் சேர்க்கை நடக்கும். பிறகு இனவிருத்திக்கான விதைகள் உற்பத்தியாகும். இப்போது அதற்கு வாய்ப்பில்லை.

சமீபத்தில் புது முயற்சியா நெப்பந்தசேயி செடியின் ஒரு பகுதியை வெட்டி, தண்ணீரில் போட்டு வெச்சோம். 15 நாளுக்குப் பின்னாடி, அந்த செடி வேர் விட ஆரம்பிச்சது. இது மாதிரி மூன்று நெப்பந்தசேயி செடிகள வளர்த்து வர்றோம். என்ன ஒரே விஷயம்னா இதன்மூலம் பெண் நெப்பந்தசேயி செடிய மட்டுமே உருவாக்க முடியும்" என்றார்.

## கரும்பு கொள்முதல் விலை: மறுபரிசீலனை செய்ய வைகோ வேண்டுகோள்

கரும்பு கொள்முதல் விலையை தமிழக அரசு மறுபரிசீலனை செய்து டன்னுக்கு ரூ. 3,500/- என நிர்ணயிக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்: தமிழ்நாட்டில் கரும்பு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்யும்போது தமிழக அரசு, விவசாயிகள் மற்றும் கரும்பு ஆலை நிர்வாகம் ஆகிய முத்தரப்புக் கூட்டத்தில் கருத்து கேட்கப்பட்டு விலை நிர்ணயம் செய்வதுதான் வழக்கமான நடைமுறையாகும்.

ஆனால், நடப்பு ஆண்டில் முத்தரப்புக் கூட்டம் நடத்தாமலேயே தான்தோன்றித்தனமாக தமிழக முதல்வர் கரும்பு கொள்முதல் விலையை அறிவித்திருப்பது ஏற்கக் கூடியதல்ல.

விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்ந்து கவலை தரக் கூடியதாகவே இருக்கின்றன. குறிப்பாக, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. விவசாய இடுபொருள்கள் விலை உயர்வு, இரசாயன உரங்களின் தாறுமாறான விலையேற்றம், அதிகரித்து வரும் டீசல் விலையினால் வாகன வாடகை உயர்வு, வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் கூலிச் செலவு ஆகியவற்றால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

மத்திய அரசு நியமித்த எம்.எஸ். சாமிநாதன் குழு கரும்பு உற்பத்திச் செலவுடன் மேலும் 50 ரூ சேர்த்து கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது. இதன்படி விவசாயிகள் கரும்பு டன் ஒன்றுக்கு வெட்டுக் கூலி, வாகன வாடகை சேர்க்காமல் வயல் விலையாக ரூ. 3,500/- நிர்ணயம் செய்யக் கோரிவரும் நிலையில் கடந்த ஆண்டை விடக் கூடுதலாக வெறும் வெறும் ரூ. 300/- மட்டுமே வழங்கி தமிழக அரசு கண்துடைப்பு அறிவிப்பு செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

கடந்த ஆண்டு மத்திய அரசு ஆதாய விலையாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 1,700/- நிர்ணயம் செய்தபோது அதனுடன் ரூ. 650/- சேர்த்து ரூ. 2,350/- என்று கொள்முதல் விலையை அறிவித்தது தமிழக அரசு.

நடப்பு ஆண்டில் மத்திய அரசு ஒரு டன்னுக்கு ரூ. 2,100/- என நிர்ணயம் செய்துள்ளபோது கடந்த ஆண்டை விட ரூ. 100/- குறைத்து வெறும் ரூ. 550/- சேர்த்து ஆக மொத்தம் ஒரு டன்னுக்கு ரூ. 2,650/- என்று தமிழக அரசு அறிவித்திருப்பது கரும்பு விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். மத்திய, மாநில அரசுகள் கரும்பு விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளைத் தொடர்ந்து அலட்சியப்படுத்துகின்றன.

சர்க்கரை ஆலைகளுக்கு 7,500 கோடி ரூபாயைக் கடனாக வழங்க முன்வந்துள்ள மத்திய அரசு, கரும்பு விவசாயிகளின் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஒரு டன் கரும்பின் மூலம் 100 கிலோ சர்க்கரை, 150 யூனிட் மின்சாரம் மற்றும் 35 லிட்டர் எரிசாராயம், இதோடன்றி மேலும் பல கழிவுப் பொருள்களின் மூலம் சர்க்கரை ஆலைகள் ரூ. 35,000/- இலாபம் ஈட்டுகின்றன. ஆனால், இதிலிருந்து 10 ரூ தொகையைக் கூட விவசாயிகளுக்கு வழங்கிட சர்க்கரை ஆலைகள் மறுத்து வருகின்றன. கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்க விவசாயிகளுக்கு உரிமம் வழங்கவும் மத்திய அரசு அனுமதி மறுக்கின்றது. மேலும், உள்நாட்டில் கரும்பு விவசாயிகளின் நிலைமை கேள்விக்குறியாக உள்ளபோது வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிறது. மத்திய, மாநில அரசுகளின் வஞ்சகத்தால் கரும்பு விவசாயிகளின் துயரம் தொடர்ந்து கொண்டே உள்ளது.

எனவே, தமிழக அரசு அறிவித்த கரும்பு கொள்முதல் விலையை மறுபரிசீலனை செய்து நடப்பு ஆண்டில் கரும்பு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ. 3,500/- என விலைநிர்ணயம் செய்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.